1195

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 MAY 1955
MADRAS
1195
2-55

7L
N55·14·5
19557

ஶ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம் பக்கம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 118
2. ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம் 122
[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A.,B.L., அட்வோகேட், திருச்சி.]
3. ஸ்த்ரீ தர்மம் 125
[ஸ்ரீ. உப. வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்வாமி.]
4. பஞ்சாங்கஸங்க்ரஹம் 128
5. திருப்பாவைக்கதை 129
[ஸ்ரீ.உப. திருவரங்கம், திருமலைதாதாசார்ய ஸ்வாமி, M.O.L., திருப்பதி.]
6. பட்டாபிஷேக ஸ்ரீமுகம் (தொடரும்) 133
[ஸ்ரீ. உப. தோட்டாலம் வேணுகோபாலாசார்ய ஸ்வாமி, தலைமை ஆசிரியர்; ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலை, பாதூர்.]
7. நற்போதுபோக்கு 137
[ஸ்ரீ.உப. ஓரகடம், கோ. ஸுதர்சனாசார்ய ஸ்வாமி, ரிடையர்டு தமிழாசிரியர், அவளூர்.]
8. அட்டைப்பட விளக்கம் 141
9. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் 142
10. செய்திகள் 144
11. ஹிந்து தர்மமும் மதமும் (தொடரும்) 147
[ஸ்ரீ. உப. வித்வான், சி. மா. வெங்டராகவாசார்ய ஸ்வாமி, சிரோமணி, ஸ்ரீ அஹோபிலமடம் ஏஜண்டு & ஸ்ரீகார்யம். ஹைதராபாத்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 14 } மன்மத ௵ வைகாசி ௴ { ஸஞ்சிகை 5

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

अन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸமீபத்தில் ஜனாதிபதி கோரக்பூரில் செய்த ஓர் ப்ரஸங்கத்தில் ஸநாதன தர்மத்தின் பெருமையைப்பற்றி அழகாக எடுத்துக் கூறியுள்ளார். இந்தியாவின் முன்னாள் பெருமைக்குக் காரணமானதும் நாட்டிலுள்ள பல்வேறு

ஸநாதன தர்மம்

மாறுபட்ட கருத்துடையவர்களை ஒற்றுமைப் படுத்துவதற்கும் மிகவும் உபகரித்தது ஸநாதன தர்மமே என்றது மிகவும் பொருத்தமான விளக்கம். வேற்றுமையிலும் ஒற்றுமையை உண்டாக்குவதே நம் முன்னோர்களின் கொள்கையாக இருந்து வந்தது. ஆனால் நவீன ராஜகீய வாதிகள் வீணில் மதஸம்பந்தமான விஷயங்களில் வ்யாக்யானம் கூறத்தலைப்பட்டு ஸநாதன தர்மத்தின் உண்மைத் தத்வங்களை அறியமுடியாமல் ஒற்றுமையின் பெயரால் வேற்றுமைகளை வீணில் அதிகரித்து வருவதில் நாம் கண்டு வருந்தவேண்டியிருக்கிறது. இம்மாதிரியான வீண் முயற்சிகளுக்கு ஜனாதிபதியின் சொற்பொழிவு ஓர் எச்சரிக்கையாக இருக்குமென நாம் நம்பலாம்.

* * *. * * * *

புராதன மொழியாகிய ஸம்ஸ்க்ருதத்தில் எழுத்துக்களை அக்ஷரங்கள் எனக் கூறுகின்றோம். அக்ஷரம் என்றால் நாசம் அடையாதது என்பது பொ

அக்ஷரத்தின் அபூர்வ சக்தி

ருள். அதாவது நிரந்தரமாக ஓர் கருத்தையுடையது எனக்கூறலாம். ஸம்ஸ்க்ருத ஶப்தஶாஸ்திரத்தில (வ்யாகரணத்தில்) ஒலியினால் ஏற்படும் சக்தியே ப்ருஹ்மம், எனக்கூறுவதுண்டு. ஒலிக்கு மஹத்தானபெருமையுமுண்டு. நவீன் விஜ்ஞான முறைகளில்கூட ஒலியினாலும், ஒளியினாலும் உயர்ந்த தத்வங்களை விளக்குகிறார்கள். அதனால்தான் ஒலியின் உருவங்களான அக்ஷரங்களும் அக்ஷரங்களின் சேர்க்கையினால் ஏற்பட்ட பதங்களும் ஆழ்ந்த கருத்துக்களையும் அரிய சக்தியையும் பெற்றிருக்கின்றன. இப்பேற்பட்ட சக்திவாய்ந்த அக்ஷரங்களினாலும் பதங்களினாலும்உயர்ந்தமந்த்ரங்கள் முற்காலத்தில் ஏற்பட்டன. இவைகளை அடிப்படையாகக் கொண்டுதான் வேதங்களின் பெருமையை நாம் அறிய முடிகிறது. வேத வாக்யங்களை அவைகளுக்கென்று ஏற்பட்ட ஸ்வரங்களையோ எழுத்துக்களையோ நம் மனம் போல் மாற்றி உச்சரித்தால் நாம் எதிர்பார்க்கும் பலன் நமக்குக் கிடைக்காது என்பது மட்டுமல்லாமல் விபரீதமான பலனும் நமக்குக் கிடைக்கும் என்பது நிச்சயம். "நிர்தேவக்வம்" அதாவது தேவதைகளே இல்லாமலிருக்கும் தன்மையை வரனாக அடைய விரும்பிய கும்பகர்ணன், நித்ரையை வரனாக ப்ருஹ்மாவினிடமிருந்து அடைந்தான் என்பதை நாம் அறிவோம். சொற்களும் அதன் பொருள்களும் நியதமாக எக்காலத்திலும் ஏற்பட்டவை அவைகளின் சேர்க்கையை நம் மதியீனத்தால் நாம் அறியாமல் போனாலும் அவை புதியதாக ஏற்படுபவை என்றோ மாறுபடுபவை என்றோ நாம் எண்ணுவது தவறு. ஒவ்வொரு மொழியிலும் இம்மாதிரியானக் கருத்துக்களைக்கொண்டு சொற்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று அந்த அந்த மொழிகளை அறிந்தவர் நன்கு உணர்வர்.

நம் நாட்டிலுள்ள தேவாலயங்களெல்லாம் ஸம்ஸ்க்ருத ஆகம ஶாஸ்திரங்களின் முறைப்படி நிர்மாணிக்கப்பட்டவை. அதனால்தான் அவைகளுக்கு பெருமை. தேவாலயங்களிலுள்ள பிம்பங்களும் ஆகமங்களின் முறைப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டவை. அதனால் தான் அதிக சக்தியை உடையவைகளாக் இருக்கின்றன. இப்படி தேவதா பிம்பங்களின் வீரியத்திற்கும் தேவாலயங்களின் பெருமைக்கும் முக்கிய காரணமான ஆகம ஶாஸ்திரங்களின்

நியமங்களுக்கு விரோதமாக நாம் எக்காரியம் செய்தாலும் அது அந்த தேவாலயங்களின் பெருமைக்கும் பிம்பங்களின் சக்திக்கும் இடையூறையே விளைவிக்கும் என்பதில் ஸந்தேஹமில்லை. தேவாலயங்களுடையவும் தேவதா பிம்பங்களுடையவும் புனிதத் தன்மையை ஒத்துக்கொள்பவர்கள் அதற்கு விரோதமான செய்கையில் ஈடுபடுவது என்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம்.

தேவதா பிம்பங்களின் சக்திக்குக் காரணமானவைகள் ஆழ்ந்த கருத்துடைய மந்த்ரங்களே. அவைகளை மாற்றினால் பிம்பத்தின் சக்தி தானாகவே குறையும். இந்த நிலையில் இந்த பிம்பங்கள் ஒரு காலத்தில் சக்திவாய்ந்திருந்த போதிலும் நம் அஜாக்ரதையினால் சக்தியையிழந்தவைகளாகி ஸாமான்யமாக ஓர் கண்காட்சி சாலையில் வைக்கப்பட்ட ஓர் பிம்பத்தை ஒத்ததாகும். நம் மதியீனத்தால் கடவுளின் சக்திக்கு ஒருவித குறைவும் ஏற்படாதாயினும் மந்த்ரங்களினால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பிம்பங்களுக்கு குறைவு ஏற்படும் என்பதில் ஐயமில்லை. கட்டுப்பாட்டினால் ஓரளவு அந்த பிம்பங்களுக்கு பெருமை இருப்பதாக வெளியில் தோன்றலாம். விக்ரஹ பூஜையை வெறுக்கும் மற்றைய மதத்தினர்களும் மனிதனின் சக்தியே, அறிவே கடவுள் என்று கூறுபவர்களும் கூட பல்வேறு உருவங்களை அவர்கள் பெருமையாகக்கொண்டு கொண்டாட்டங்களையும் உற்சவாதிகளையும் நடத்தி வருவதை நாம் காண்கிறோம். இச்செயல்கள் அவர்களின் உற்சாகத்தினால் ஏற்பட்ட கொண்டாட்டமேயல்லாது அவர்களின் கொள்கைச் சின்னங்களாக ஆகமுடியுமா? அவர்களின்மதத்தத்வங்களாக இருக்கமுடியுமா? அதுபோல்தான் நம்முடைய தேவதா பிம்பங்களும் ஓர் கொண்டாட்ட கருவியாக மாறுமேயல்லாது சக்திவாய்ந்த அருள் வடிவமாக இருக்கமுடியாது.

கடவுளின் பெருமையை அறிவதற்கு மந்திரங்களை மாற்றிவிடுவது சரியான முறையாகாது. பண்டைக்காலத்து ஆழ்வார்களும் நாயன்மார்களும் மந்திரத்தினால் பிரதிஷ்டை செய்யப்பட்ட அர்ச்சா ரூபங்களை (பிம்பங்களை) பல பாடல்களால் புகழ்ந்து தாங்களும் பகவத்குணங்களை அனுபவித்து பாமரர்களுக்கு பக்தியைப் புகட்டினார்கள். தங்கள் பக்திப்பாடல்களால் பிம்பங்களை பிரதிஷ்டை செய்யவில்லை. மேனாட்டில் மதக்கிளர்ச்சி ஏற்பட்ட சமயத்தில் மொழியிலும் ஓர் வெறுப்பு ஏற்பட்டு நாட்டு மொழியிலேயே எல்லா தெய்வ வழிபாடுகளையும் செய்துகொள்ளவேண்டும் என்று கூறிய "மறுப்பினர்" (ப்ராடெஸ்டெண்ட்ஸ்) தங்கள் மதத்தை அதிக மதிப்புடனே பக்தியுடனே காப்பாற்றி வருகிறார்கள் என்று கூற இயலாது. அதேபோல் ஒரு மொழிப்பற்று காரணமாக நம் நாட்டில் தொன்று தொட்டு வந்த ஓர் பொக்கிஷத்தை நாம் இழந்துவிடலாகாது. தமிழ் மொழியிலேயே அர்ச்சனைகளை தேவாலயங்களில் செய்வதால் அவைகளின் கருத்து நமக்கு நன்கு புலப்படுவதால் நமது பக்தி பெருகும் எனக்கூறுவது சரியல்ல. சக்தியையே பிம்பம் இழக்குமானால் அறியவேண்டிய பெருமை என்ன இருக்கிறது. உண்மையாக பக்தியுள்ளவர்கள் பகவத்குணத்தை ஸ்தோத்திரங்களின்வாயிலாகவும் மொழிபெயர்ப்பின் மூலமாகவும் அறிந்து கொள்ளமுடியும். கடவுளை நம்பாத நாஸ்திகர்களை ஆஸ்திகர்களாக மாற்றுவதற்காக நாம் அறிந்த தமிழ்மொழியில் அர்ச்சனை செய்யவேண்டும் என்று கூறுவதும் ஒப்புக்கொள்ளுவதற்கில்லை. ஆலயங்களில் பற்பல மண்டபங்களிலும் கோபுரங்களிலும் காணப்படும் கடவுள் வடிவமான சிலைகளின் மூலமாகவோ பற்பல கண்காட்சிச்சாலைகளில் வைத்துக் காப்பாற்றப்பட்டுள்ள சிலை, விக்ரஹம் இவைகளினாலோ ஆஸ்திக்யத்தைப்பரப்ப முடியுமா? எவ்வளவு நாஸ்திகர்கள் ஆஸ்திகர்களாக இதன்மூலம் மாறியிருக்கிறார்கள்? மந்திரங்களின் சக்தியென்பது நம் அறிவிற்கும் தர்க்கத்துக்கும் புறம்பான ஓர் உயர்ந்த விஷயம். கற்றறிந்தவர்கள் ஆழ்ந்த கருத்துக்களை நன்குணர்ந்து அதன்படி நடக்கக்கூடியவர்கள். உலகிலுள்ள பெரும்பாலோர் பாமரர்களே. பாமரர்களில் சிலர் வீண்வாதக்காரர்களும்கூட. அவர்கள் பக்தர்களாவதற்குப் பதிலாக வீண் நாஸ்திகர்களாக ஆவதற்கும் வழியேற்படலாம். மந்திரங்களின் மொழிபெயர்ப்பின் காரணமாக இவ் வீண்வாதக்காரர்கள் நாஸ்திக ப்ரசாரங்களில் ஈடுபடுவதற்கு நாம் ஓர் வழி செய்ததாக ஆகும். பாமரர்களுக்கு ஓரளவு மந்த்ரங்களின் மொழிபெயர்ப்பு இல்லாமலிருப்பதே நல்லது. சிறிய குழந்தைகள் மின்சார விளக்கைக் கண்டு

சந்தோஷப்படுகிறார்கள். எப்படிமின்சாரசக்தி ஏற்படுகிறது என்பதை அவர்கள் அறிய முடிவதில்லை. அவர்களுக்கு நாம் அறிவிப்பதும் கடினமான கார்யம். அதுபோல் இயற்கையிலுள்ள ஜனனமரணம் போன்ற பல தத்துவங்களை சிறு பிராயத்தில் இவர்கள் அறிந்துகொள்ளத்தான் முடியுமா? அதுபோலவே பாமரர்களில் பெரும்பாலோர் மந்திரங்களின் சக்தியை அறிய முடியாது. அவர்களுக்குக் கற்பிப்பதற்கு நாம் முயலுவது வீண் முயற்சியாகும்.

தற்காலம் நம் நாட்டிலுள்ள தேவாலயங்கள் பாஞ்சராத்ர, வைகானஸ, வைஷ்ணவ, சைவ, தாந்த்ரீக ஆகமங்களின் முறைப்படி நிர்மாணிக்கப்பட்டவைகள். இந்த ஆகமங்கள் ஸம்ஸ்க்ருத மந்த்ரங்களை அடிப்படையாகக் கொண்டவைகள். அதேபோல் தமிழிலும் எழுத்துக்களுக்கு சக்தி உண்டு என்பதைத் தமிழ் அறிஞர்கள் அறிவர். அறம் வைத்துப் பாடுதல் என்று ஒரு வழக்கம் தமிழ் இலக்கியங்களிலிருந்து நமக்குத் தெரிகிறது. அப்பாடல்களின் பலாபலன்களைத் தமிழ் இலக்கியங்களைப் படித்தவர்கள் நன்கு அறிவர். ஆனாலும் ஆகமங்கள் ஸம்ஸ்க்ருதத்தில் இருப்பதினாலும் அம்மொழியிலுள்ள மந்த்ரங்களைக் கொண்டு தேவதாபிம்பங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதால் அதற்கு விரோதமான கார்யங்களில் நாம் ஈடுபடுவது தெய்வநெறிக்கு உகந்ததாக ஆகாது. தமிழ்மொழிப்பற்றில் நாம் யாருக்கும் குறைந்தவரல்ல. ஸம்ஸ்க்ருதவேதத்தையும் ஆழ்வார் ஆசார்யர்கள் அருளிச்செய்த திராவிடவேதத்தையும் ப்ரவர்த்திப்பதே நமது கடமை என்று நமது ஆசார்யர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை யாவரும் அறிவர். மொழிப்பற்று மொழிப் பித்தாக மாறி நற்காரியங்களுக்கு இடையூறு ஏற்படாமல் செய்யவேண்டியது தெய்வத்தினிடம் நம்பிக்கையுடையவர்களின் முக்கிய கடமையாகும்.

* * * * *

ஸமூஹ சீர்திருத்தங்கள்

சில காலமாக நமது அரசியல் மன்றங்கள் பலவித ஸமூஹ சீர்திருத்தங்களில் ஈடுபட்டிருப்பதை நாம் நன்கு அறிவோம். ஹிந்து விவாஹ நிர்ணய மசோதா, சொத்துரிமைமசோதா முதலியவைகள் பலவிதமாக விவாதிக்கப்பட்டு வருவதையும் தற்காலமுள்ளநிலைமையில் அடிப்படையான மாறுதல்களைச் செய்யப்போவதையும் நாம் அறிவோம். இயற்கையில் ஏற்பட்ட குறைவுபாடுகளையும் மறந்து பெண்மணிகளும் ஆண்களுடன் எல்லாவிதத் தொழில்களிலும் ஸம உரிமை நாடுவது கலியின் விந்தையே. நம் ஸமூஹத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் பெண்களுக்கு ஆண்களை விட உயர்ந்த பதவி கொடுக்கப்பட்டிருந்தும் அதை உணரமுடியாது வீண் போட்டியில் அவர்கள் ஈடுபடுவதைக்கண்டு நாம் வருந்தவேண்டியிருக்கிறது. ஏதோ ஒன்றிரண்டு குடும்பங்களில் பெண்களுக்கு அநீதி இழைப்பதைப் பெரிதாக்கி அதை ஆதாரமாகக் கொண்டு வேண்டாத மாறுதல்களைச் செய்வது ஸமூஹ அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும். உண்மையில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் அதிகச் சலுகைகளைக் குடும்பத்தில் பெற்றிருந்தும் பிதுரார்ஜித சொத்தில் உரிமை கொண்டாடுவது மிகவும் ஒப்புக்கொள்ளமுடியாத ஓர் கக்ஷியாகும். கற்றவர்களிலும் பலர் பண ஆசையால் கலியாணத்திற்கு வரதக்ஷிணை என்ற ஓர் கொடிய வழக்கத்தை ஆதரித்து நமது ஸமூஹத்திற்குக் கேடு விளைவிக்கின்றனர். இனி சொத்து உரிமையையும்பெற்றபெண்கள்விஷயத்தில்பலஎதிர்பாராத அமைதியின்மையையும் குடும்பப் பூசல்களையும் நாம் பார்க்க நேரிடும். உலகப்போக்கை அநுஸரித்து உயர்ந்த கொள்கைகளையும் பழக்கவழக்கங்களையும் நம் நாடும் ஆதரிப்பதன் மூலம் நம் நாட்டுக்கு உரிய உயர்ந்த பண்பாடுகளை நாம் இழக்க நேரிடும். நம் ஸமூஹத்தின் நன்மையில் பற்றுள்ள ஆஸ்திகர்களாவது இம்மாதிரியான உயர்ந்த பழக்கவழக்கங்களில் நோக்குடையவர்களாக இருந்தால் சிறிது காலம் அமைதி நிலவ உதவலாம், மதப்பற்றினாலும் அதன் மூலமான பழக்க வழக்கங்களினாலும் நமது ஸமூஹம் நேர்மை கெடாமல் இதுவரையில் இருந்துவந்தது. மதக்கொள்கைகளையும்

ஸமூஹப் பழக்க வழக்கங்களையும் வேறுபடுத்த ஆரம்பித்தது முதல் நமது நற்காலமும் மாறுபடவாரம்பித்தது. ஸமூஹசீர்திருத்தமென்ற பெயரில் குடும்பத்தின் ஒற்றுமையை குலைக்கும்படியான சட்டதிட்டங்களைக் கொண்டுவருவதால் இதுவரையில் நாம் போற்றிவந்த குடும்பக்கட்டுப்பாடு, பதிபத்னி உறவு முதலியவைகளை நாம் மாற்றிக்கொள்ளும்படியாக நேரிடும். அதன் மூலம் அன்பு, தயை முதலியவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஸமூஹத்தை இழந்து பொருளாதாரத்தையே அடிப்படையாகக் கொண்ட ஓர் ஸமூஹத்தை ஏற்படுத்திக் கொள்வதாகும். இது நாளடைவில் தெய்வ பக்தியைக் குறைப்பதற்கும் ஹேதுவாகும். பத்தொன்பதாவது நூற்றாண்டில் பொருளை தெய்வம் என்று கருதிவந்த மேனாட்டவர்களை அன்னாட்டு மேதாவிகளான மேத்யூ ஆர்னால்டு' முதலியவர்கள் நிந்தித்து தெய்வ வழிபாட்டிலும் உண்மையான ஸமூஹசேவையிலும் ஈடுபடும்படி வற்புறுத்தினார்கள். அம்மாதிரியான ஓர் வருந்தத்தக்க நிலைமை நமக்கு நம் நாட்டில் நமது அரசாங்கத்தினாலேயே ஏற்படுகிறதென்பது ஓர் விந்தையே.

ஸமீபத்தில் நிலச்சீர்திருத்தம் ஒன்று நம் நாட்டில் வர இருப்பதை நாம் அறிவோம். எதிர்பாராதவிதமாக பல புது மாறுதல்கள் ஏற்படவிருக்கின்றன. பல்லாண்டுகளாக பரம்பரையாக நிலத்தை அநுபவித்து வந்தவர்கள் ஏதோ சில அற்ப காரணங்களால் நிலத்தையே இழப்பார்கள் போல் தோன்றுகிறது. 'உழுபவனுக்கே நில உரிமை' என்ற ஓர் புதிய கொள்கை நம் ஸமூஹத்தினரிடையே வலுத்து வருகிறது. தவிர்க்கமுடியாத சில காரணங்களினால் நிலத்தைத் தானே சாகுபடி செய்ய முடியாத, ஆனால் நில வருவாயையே நம்பி வாழ்ந்துவரும் நம்மில் பலருக்கு இதுவரையில் இருந்து வந்த சொற்ப நிலவருவாயும் அகற்றப்படுமாயின் நம் ஸமூஹத்தினரின் பொருளாதார நிலை மிகவும் சீர்கெடும் என்பதில் ஸந்தேஹமில்லை. முற்காலத்தில் ஆழ்ந்த அறிவைப் பெற்ற அந்தணர்கள் அரசர்களாலும் அன்னியர்களாலும் காப்பாற்றப்பட்டு வந்தனர். அந்நிலைமை மாறி விட்டது. ஆழ்ந்த அறிவை அற்பவிஷயங்களில் செலுத்தி நம் கௌரவத்தையும் இழந்து வருகிறோம். இந்நிலையில் நம் ஸமூஹத்திலுள்ள பெரியவர்கள், தனிகர்கள், ஆஸ்திகர்கள் ஒன்று கூடி நம் ஸமூஹத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டிய நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நிலச்சீர்திருத்தத்தில் சாமான்யப்பட்டவர்கள் நில உரிமையை இழப்பதோடு பெரிய நிலச்சுவான்தார்களுக்கும் அதிக நஷ்டம் ஏற்படலாம். பூதான இயக்கம் என்ற கொள்கையை அநுஸரித்து நம் ஸமூஹத்தினரின் கல்வியையும், அறிவையும், வைதிகப் பற்றையும், பொருளாதார நிலைமையையும் சீர்படுத்திக் கொள்வதின் நிமித்தம் பெரிய நிலச்சுவான்தார்கள் தங்கள் நிலத்தின் ஓர் குறிப்பிட்ட பகுதியை ஒதுக்கி வைத்து மேற்கூறிய நம் ஸமூஹமுன்னேற்றச் செயல்களில் செலவு செய்து ஸமூஹத்தினரை முன்னுக்குக் கொண்டுவரலாம். ஒவ்வாருவரும் ஓரளவு அதாவது கூடுமானவரை நமது ஸமூஹத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட வேண்டும் என்பதை நன்குணர்ந்து அநுஷ்டித்துக் காட்டவேண்டிய காலம் இதுதான். இப்பொழுது நாம் சிரத்தைக்குறைவுடன் இருந்தால் நம் ஸமூஹத்தின் உயர்ந்த பண்புகளை நாம் இழப்போம். அதற்கு இடமளிக்காமல் முன்னெச்சரிக்கையாக நாம் நடந்துகொள்ள வேண்டுமென்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

ஸ்ரீ:

ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

என்ன ஆச்சர்யம், என்ன ப்ரபாவமிவருக்கு

'க்ஷுப்⁴யந்தே யஸ்மிந்நமரா: ஸ்வயமபி ச காலஶ்ச
ஸர்வங்கஷ: ஶங்கந்தே கிம் நிர்ஜரா நிஜ
பதா³வஸ்தா²நம் பாக்ஷிகம் । ரக்ஷோ
தா³நவயக்ஷகு³ஹ்யககா³ணா யாவத்³ய:
தோ த்³ரவந்த: பதா³ம்போ⁴ருஹத்³வந்த்³வ
ஸம்ஶ்ரயவ்ருத்திவிஶ்வஸ்தஸ்ய ந:॥

அபீதிஸ்தவத்தில், 'ந தஸ்ய யமவஶ்யதா நரகபாதபீ⁴தி: குத:' என்று கூறப்பட்டது. அவருடைய படர்களுக்கு அவர் காதோடு ரஹஸ்யமாய்க் கூறிய பாராசர ச்லோகங்கள் ப்ரஸித்தம். பாமதியில் வாசஸ்பதி மிச்ரரும் அதை ப்ரமிதாதிகரணத்தில் விவரித்தார். இங்கே முதலடியில் 'ஸர்வம் த்³ரஷ்டா யயா ஶோகே தே³வரா ஸ்யவிஷ்வா:। ஊர்த்⁴வம் யாந்தம் தத³ந்தம் வந்தே யஸ்மிந் க்ஷராஃ' என்ற வசனம் நினைக்கப்படுவதாக 'ப்ரபாவிலாஸம்' விளக்கிற்று. 'க்ஷுப்⁴யந்தே யஸ்மிந்நமரா:' என்று அங்குள்ளபடியே இங்கும் படிக்கப்பட்டுள்ளது. அவர் படர்கள்மட்டுமல்ல, அவரும் பயப்படுகிறார். 'ஸர்வங்கஷ:' எல்லோரையும் ஸம்ஹரிக்கும். காலஶ்ச — கால தேவதையான, ஸோऽபி — இவரும், ஸ்வயம் — தானும் (நடுங்குகிறார்) நிர்ஜரா: — தேவர்கள், பாக்ஷிகம் — ஒருக்கால், நிஜபதா³வஸ்தா²நம் — தங்கள் ஸ்தானங்களைப் பற்றிவிடுவரோ என்று, ஶங்கந்தே கிம் — அச்சப்படுகிறார்கள். 'ஸதாம் விப்⁴யா ஸஜ்ஜந்தே ஸோ' என்னும் பக்திநிஷ்டரான பல அதிகாரிகளில் இவர் ஐச்வர்யகாமரோ, காமங்களைத் துறந்தவரோ என்றிவர் ஹ்ருதயத்தை அறியாமல் சங்கை. ரக்ஷோதா³நவயக்ஷகு³ஹ்யககா³ணா: — ராக்ஷஸர்கள், அஸுரர்கள், குஹ்யகர்முதலியவர்களிவரைக்கண்டு நடுங்கித்தூர ஓடுகிறார்கள். 'நிதியைரக்ஷிக்கும் யக்ஷர்கள் குஹ்யகர்கள் மணிபத்ரர் முதலியவர்கள்' என்று அமரஸுதை. பகவானுடைய விச்வரூபத்தைக்கண்டு 'ரக்ஷாம்ஸி பீ⁴தாநி தி³ஶோ த்³ரவந்தி' என்று நடுங்கியதுபோல, பதா³ம்போ⁴ருஹத்³வந்த்³வஸம்ஶ்ரயவ்ருத்திவிஶ்வஸ்தஸ்ய ந:— இவருடைய இத்தனை ப்ரபாவத்திற்கும் காரணம் ஸ்ரீமந்நாராயணசரணகமலத்வயத்தில் இவன் மனம் வைக்கப்பட்டிருப்பதுதான். யாவஜ்ஜீவம் த்வயத்தை யர்த்தாநுஸந்தானத்துடன் ஜபித்துக்கொண்டிருப்பதின் ப்ரபாவம் என்று வ்யஞ்ஜகம்.

அடுத்த ச்லோகத்தில் திருவஷ்டாக்ஷர நிஷ்டாப்ரபாவம் வர்ணிக்கப்படுகிறது.

மேலும்—

யத்ராவஶ்யஸ்ய ஸாந்த்³ரதிமிவிஶ்ரித்ய
நாநாவைராஶ்யவிஶ்தோ ஜநபதே³
நிவஸத்யநந்ய:। ஸிஞ்சாஶ்ரூபூதிநியா
விஶ ஸர்வ வநதே நிவர்த்யாயயத்
விஷாந்தி நிராயயஶ்ச॥

இந்த ச்லோகத்தில் திருவஷ்டாக்ஷரமந்த்ர ஸம்ஸித்தியினால் இவரிருக்கும் தேசத்திற்கு வரும் மஹாக்ஷேமங்கள் வர்ணிக்கப்படுகின்றன. 'யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்³தோ⁴ மஹாபா⁴கோ³ மஹீயதே। ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதி⁴து³ர்பி⁴க்ஷதஸ்கரா:' என்கிற ச்லோகத்தை இங்கே அநுஸரிப்பது ஸ்பஷ்டம். அஷ்டாக்ஷர ப்ரஹ்மவித்யையிலிருந்து 'ஹந்த வேதாள ரக்ஷாம்ஸி தயா ரோகா³வஶ்யத்ய:। க்ஷுத்³ர க்ஷாரஸ்ய ஸம்ஸ்ப்ருஶ்யா வித்³ரவந்தி தி³ஶோ த³ஶ॥ தே³வா நவக்³ரஹாஶ்சைவ விஷ்ணுநாமாநுவர்த்திந:। வ்ருண்வந்தி மஹாத்மாநம் அஷ்டாக்ஷரவித³ம் நரம்' என்ற இரண்டு ச்லோகங்களை ப்ரபாவிலாஸம் உதாஹரித்தது. முன் ச்லோகத்தில் இந்த

ச்லோகங்களும் ஸ்வாமி திருவுள்ளத்திலுள்ளன. யத்ராவி ஜநவதெ – எந்த தேசத்திலேனும், கநந்யா: கவஸா – பகவதேகநிஷ்டரான அநந்யரான இவர், விதிதாநுஹாவெ: – இவருடைய (அஷ்டாக்ஷரஸம்ஸித்தி) மஹிமையையறிந்த, ஸுக்ருதிபி: – பாக்யசாலிகளாலே, கூஜ்விதொ நிவஸதி – பூஜிக்கப்பட்டு வாஸம் செய்கிறுரோ, 'தஸ்மாதாத்மஜ்ஞம் ஹ்யர்செயெத் பூதிகாம:' என்று ப்ரஹ்மவித்யையை உள்ளபடி உபதேசிக்கத் தொடங்கிய முண்டகோபநிஷத்து 5-வது கண்டத்தின் முடிவில் பரமாத்மஜ்ஞாநிக்கு எல்லாபோகங்களும் எல்லாபோக்யங்களும் வசப்பட்டிருப்பதால், க்ஷேமம் வேண்டியவர்கள் ஆத்மஜ்ஞரை அர்ச்சிக்கவேணும்' என்று அறுதியிட்டதையுமிங்கே நினைக்கவேணும். இவர் தபோவனத்தை விட்டு நாட்டிற்கு (ஜநபதத்திற்கு) வருவது கஷ்டம். இவரிடம் செய்யும் ஆதர பரிசர்யைகளால் இவரை நாட்டில் வஸிக்கச்செய்யவேணும். 'ஜநபதம்' என்பதால் இவர் நகரத்தில் வஸிக்க அங்கீகரிக்கமாட்டார் என்றும் ஸூசநம். விஸாமித்ராச்ரமாதிநியாவிஹ – ஸித்தாச்ரமம் போன்ற (இவர் வஸிக்கும்) இங்கே, 'ஸித்தாச்ரமம்' என்று வாமநாச்ரமமான விச்வாமித்ராச்ரமத்தைக் கொள்ளலாமென்று இரண்டு உரைகளும் கூறுவது. ஸவெ – ஸர்வஜநங்களும், நிவ்ருத்தாயயஸா நிராயயஸா: – தேஹவ்யாதிகளும் மனோவ்யாதிகளுமற்று, விஹரந்தி – ஸுகமாய் ஸஞ்சரிக்கிறுர்கள். வ்யாதிகள் முதலியவை அடியோடு ஸஞ்சரிக்காததால் ஜனங்கள் ஸ்வஸ்தமாய் ஸஞ்சரிக்கிறுர்கள்.

என்ன ஆச்சர்யம்! பகவானிடம் ப்ரீதி செய்வதைக்காட்டிலும் அவர் பக்தரிடம் ப்ரீதியின் ப்ரபாவம் அதிசயிக்கிறது. 'மம மத்பக்தபக்தேஷு ப்ரீதிரப்யதிகா பவேத்' என்ற பகவத் வசனம் இங்கே நினைக்கப்படுகிறது. அது 'தவ தாஸ்யஸுகைகஸங்கிநாம்' என்கிற ஸ்தோத்ரரத்நச்லோகத்தின் பாஷ்யத்திலுமுதாஹரிக்கப்பட்டது. 'மத்பக்தஜநவாத்ஸல்யம் பூஜாயாஞ்சாநுமோதநம் । ஸ்வயமப்யர்ச்சநஞ்சைவ' என்று அஷ்டவித பக்திகள் நடுவே பக்தபக்திகளும் பகவத்பக்தியாக பகவானாலேயே கூறியதையுமங்கே காட்டியுள்ளது. இந்த அதிக ப்ரபாவமும் பகவானுக்கு தன் பக்தர்களிடம் ப்ரீதி அதிகமாயிருப்பதால்தான். இதற்கும் பகவானுடைய அதிகப்ரீதியே காரணம். இவனுமப்படியேதான் எப்பொழுதும் பேசுவது. இவன் நாவிலிப்பாட்டே யுளது.

> நாதெ நஸ்த்ரணமநந்ய ஏ நந்யஊவி வா
> தஸோஹிநாலேகி நீநாலேகஸ்வரஹணீய
> ஸஸாரஸமேவா வாவா ந யாவாமெஹ।
> ஶாஸநாஜ்ஞாம் ஓஹெமஹி ஸ்ப்ருயியாம்
> ஶாஸாஜ்ஞவிஸாஜ்ஞிநாம் மஹெதுஶ்வய
> திநவ்யா தஸயோஸக்தம் வ்ய ஸக்தம்
> மஹா:॥

புருஷார்த்தகாஷ்டாதிகாரத்தில் முடிவுச்லோகமாகவும் படித்துளது இந்த ச்லோகம். சிறிதே விஜ்ஞாபிப்போம். நாதெ நஃ – நம் நாதனிடம், 'நாதநம் செய், கேள், கேள்' என்று நம்மை ப்ரேரித்துக்கொண்டேயிருக்கிறுர். 'நாத, நாத' 'கேள் கேள்' என்று மிகவாசைப்பட்டு ப்ரேரித்துக்கொண்டேயிருக்கும் எம் நாதனிடத்தில், த்ருணம் – 'த்ருணம் நாரீவிலாஸஸ்ய த்ருணம் ஶூரஸ்ய ஜீவிதம்। த்ருணம் ப்ரஹ்மவிதோ விஶ்வம் நிஸ்ப்ருஹஸ்ய த்ருணஞ்ஜகத்' என்ற ச்லோகத்தை ஸ்வாமி ஸ்தோத்ரபாஷ்யத்தில் இந்த ப்ரகாணத்திலுதாஹரித்தார். 'த்ருணீக்ருதாநுத்தம முக்திமுக்திபி: । மஹாத்மபிர்மாமவலோக்யதாம் நய' என்ற ஸ்தோத்ரரத்நச்லோகமிங்கே நெஞ்சிலோடுகிறது. 'அநுத்தமமான புக்தியென்ன, முக்தியென்ன இவற்றை த்ருணம் போல திரஸ்கரிக்கும் மஹாத்மாக்களாலே கடாக்ஷிக்கப்படுவதை நீர் க(வ)டனே செய்தருளவேணும்' என்று அங்கே ப்ரார்த்தனை. வதாந்யஜன ப்ரபு 'கநந்யக வத, கநந்யக வத' இன்னும் மேலே கேளும், இன்னும் மேலே கேளு'

மென்று கூறுபவர். ‘வஶீ வஶாந்ய:’ என்ற படி பரமோதாரப்ரபு. இவர் கேட்கமாட்டே னென்றே பிடிவாதம் செய்கிறார். ஐச்வர்யத் தைக் கேளுமென்று நாதன் கேட்கிறார். அது ‘த்ருணம்’ வேண்டாமென்று பதில். கைவல்ய– மற்றொன்றை, ‘கைவல்யத்தைக்’ கேளும். அதுவும் ஓர் த்ருணம்; கேளேனென்று பதில். கைவல்ய வா— மோக்ஷத்தையே தானுவது கேளும். இவையெல்லாம் புருஷார்த்தங்க ளானபடியால் நீர் அர்த்தித்துதானே நான் கொடுக்கவேணும்; அதுவும் த்ருணம் போன் றதே. (புருஷார்த்தகாஷ்டையை விரும்புவ னுக்கு) மோக்ஷமும் த்ருணமே. அதையும் கேளேன். ‘வாசா நயாசாமஹே’ எம் நாத னுயினும் அவரிடம் நாம் யாசிக்கமாட்டோம். ஏன்? அவரநுக்ரஹித்திருக்கும் எம் வாக்கி னுள் கமழும் ஸௌசந்தத்தை அவருடைய நாபீ பத்மமே தனக்குக் கிடைக்கவேணு மென்று ஆசைப்படுவது. அப்படிக்கொத்த வாக்கை இவற்றை யாசிப்பதில் நாம் விநியோகிக்கமாட் டோம். ஆனல் இந்த வாக்குக் கொடுத்தது வீணுகலாமோ? அதைக் கொடுத்த நாதனை அர்த்திப்பதில் விநியோகிக்க வேண்டாமோ? ‘வேண்டியமட்டும் விநியோகிக்கிறேன், திரும் பவும் திரும்பவும் விநியோகிக்கிறேன்; காஷ் டாகத ஸௌரபத்துடனவர் கொடுத்த வாக் கை புருஷார்த்தகாஷ்டையை யடைய யாசிப் பதில் ‘தேஹி’ விநியோகப்படுத்துகிறேன். பரஸ்வீகாரப்ப்ரார்த்தனை ஸக்ருத்தே. இந்த ப்ரார்த்தனையை அஸக்ருத் செய்கிறேன். இந்த புருஷார்த்தகாஷ்டா ப்ரார்த்தனையில் பர்யாப்தி, அலம்புத்தி கிடையாது. அந்த ஸர்வோத்தம புருஷார்த்தமென்ன? ஸநாதா நாதா- ஒரு பரமைகாந்தியல்ல. அனேகபர மைகாந்திகளுடைய ஸேவா பரிசர்யாதிகளைப் பெறவேணும், ‘ஸநாதஸி:’ என்ற பஹு வசனத்திற்கு ‘உஜ்ஜீவநைவ ஸாரஸாயத்– கைவ ஸாயுஜ்யவஸ்துவெக்ஷயா ஸஹாவவநம்’ என்று ஸ்வாமிஸாதித்த பாஷ்யத்தை நினைக்க வேணும். ‘ஸநாதநாதா’ என்பதற்கு அநு த்தமபுக்திமுக்திகளை த்ருணீகாரணம் செய்த வர்’ என்று பொருள் கொள்ளலாம். நாதனி டம் பதிவ்ரதாதர்மத்தை யநுஷ்டிக்கும்சுத்தி. ‘விஶநாத: ஸநாதநாம் யுவாவஶேநஹிவஸஹி வூணயிந:’ என்ற முராரி ச்லோகத்தை இங்கே நினைக்கவேணும். நாங்களேதாவது ஐச்வர்யாதிகளை ப்ரார்த்திப்பவரென்று தெரிந் தால் அவர்கள் எங்களைத் தம் கிட்ட அணுக விடமாட்டார்கள். அவர்களைப்போல் சுத்த ராய் இருந்தால்தான் அவர்கள் ஸந்நிகர்ஷமும் ப்ரஸாதமும் கிடைக்கும். ‘தாஃ’ இதைமட் டும் தேஹி: ஆசாஸனம் செய்வோம். ‘மெஹெ தேஹி’ இந்த ஸந்தோஷம் எங்களுக்கு அலப்ய லாபம். ‘ஷிரயியாம்’ ஒரு ஆசையினுலும் கலங்காத உறுதியை யுள்ளவர். பரம-ஏக– நிச்சயமுடையவர் ‘ஸநாதஸிநாதிநாம்’ (1) அந்தப்புர பத்நீமாருடைய ஸித்தாந்தம், உறுதி பகவானிடமே பாதிவ்ரத்யம். ‘வத்ரு யஷ்ஹொமா:, வத்ருயீநஹொமாஸ்’ என்று ஸாராஸ்வாதிநீ. ‘தத்தஸ்ய ஸஷ்ரஸம் ஹவெஸ’ என்ற பிராட்டிநிலை என்று ஸாரப்ரகாசிகை. ‘ராஜாந்தப்புரஸ்த்ரீகள் ஸித்தாந்தம் போன்ற ஸித்தாந்தமுடையவர்’ என்று ஸாரஸங்க்ர ஹம். வூஸக்திம்– அப்பரமைகாந்திகளின் ப்ர ஸாதத்தை திருவுள்ள உகப்பை, தேஹி:– மஹெஹி, நாமெயஹி, திரும்பவும் திரும்ப வும் அடைய நாயநம் செய்கிறோம். ஆசாஸிக் கிறோம். ‘தேமெக்ஷுஸ்யஷிநவூஹாதஸயோ ஸக்திம்’ அந்த ப்ரஸத்தியால் மோக்ஷைச்வர்ய மெனும் நித்யவிழிப்புப்பகலின் விடிவு நேரம் நெருங்குவதெனும் ‘ஆஸத்தி’ கிடைக்கும். மோக்ஷைச்வர்யம் தானே கிட்டும். ‘ராத்ரிக்கு விடிவுஸமயம் வந்துவிட்டால் பகல் தானேவரு வதுபோல’ என்று ஸாராஸ்வாதிநீ.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்த்ரீ தர்மம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஷடி நியமங்கள்

ஸங்கம காலத்தில் பர்த்தாவைத் தவிர வேறொருவரை நினைக்கக்கூடாது. இருவரும் மௌனமாகவே இருக்கவேண்டும். ஸங்கமத்திற்குப் பிறகு, வேறு படுக்கையில் படுக்கவேண்டும். ஸங்கம காலத்தில் உடுத்தின வஸ்திரத்தை உடுத்திக்கொண்டு, வைதிக காரியங்களைச் செய்யக்கூடாது. கர்பிணி 8 மாதத்திற்குப் பிறகு ஸங்கமம் செய்யக்கூடாது. ஸங்கமத்திற்குப் பிறகு 2 தடவை மண்ணை போட்டு சௌசம் செய்து, கால் கைகளை அலம்பி வேறு வஸ்திரம் தரித்து, உலர்ந்த வஸ்திரத்தினால் கால் கைகளை துடைத்துக் கொண்டு வேறு படுக்கையில் படுத்துறங்க வேண்டியத். ஸ்த்ரீயானவள் சௌக்கியமாக இருக்கும் காலத்தில் பர்த்தா கூப்பிட்டு ஸங்கமத்திற்கு இணங்காமலிருப்பதும், ருது உண்டாக மருந்து சாப்பிடுவதும், கர்பத்தை அழிப்பதும் கொடியதான பாதகமாகும்.

ஸ்வப்நம்

தூங்கும் காலத்தில் கெட்ட ஸ்வப்நங்களைக் கண்டால் யெழுந்திருந்து 2 தடவை ஆசமனம் செய்து பகவானை நமஸ்கரித்து பகவானுடைய நாமங்களை கீர்த்தனம் செய்ய வேண்டும்.

ருதுகால தர்மம்

முன்பின் ஸந்த்யா காலங்கள் தவிர, இராத்திரி காலத்தை மூன்று பாகமாக்கி மூன்றாவது பாகத்தில் ருதுவானால், மறுதினம் முதல் 3-தினங்கள் விலகி இருக்கவேண்டும். அதற்கு முந்தியானால், மேல் 2-தினங்கள் விலகி இருக்கவும்.

ருதுவான ஸ்த்ரீயானவள் எந்த வஸ்திரத்துடன் ருதுவானாளோ அதே வஸ்திரத்தை மூன்று தினங்களிலும் தரித்திருக்கவேண்டும். ருது தினங்களிலும் பல் துலக்குவது, ஸ்நானம் செய்வது, எண்ணை தேய்த்துக்கொள்வது சந்தனம் புஷ்பங்களை தரிப்பது, தாம்பூலம் போடுவது, தலையை அலங்கரிப்பது, நகத்தை அறுப்பது, மற்றொரு ருதுவான ஸ்த்ரீயைத் தொடுவது, பேசுவது, பலாச இலையில் சாப்பிடுவது, புருஷனோடு ஸங்கமம் செய்வது, ஆறு தாண்டிப் போவது, நமஸ்கரிப்பது, மந்திரங்களை ஜெபிப்பது, பகலில் தூங்குவது, பகவானுக்கு நிவேதனம் செய்த அன்னத்தை புஜிப்பது, மற்றும் வீட்டுவேலைகளைச் செய்வது முதலியவைகளைச் செய்யக்கூடாது.

ருதுவான ஸ்த்ரீ மூன்று தினங்களிலும் படுத்திருந்த இடம் மண் தரையாகவிருந்தால் 4 விரலாழம் அந்த மண்ணை யெடுத்து விட்டு வேறு மண்ணைப் போடவேண்டும்.

ஸ்நாநம்

4-வது தினம் காலையில் ருதுவான வஸ்திரத்தை வண்ணானிடம் கொடுக்கவும், அல்லது உப்பு ஜலத்திலாவது போட்டு வேக வைத்து தோய்க்கவேண்டும்.

4-வது தினம் காலையில் கால்கள், கைகள், குஹ்யஸ்தலங்களையும் 32 தடவை மண்ணைப் போட்டு அலம்பவேண்டும். நகங்களையும் சுத்திசெய்து, 32 தடவை வாயை கொப்பளிக்க வேண்டும். சூரியன் உதயமாகி 6 நாழிகைக்குப் பிறகு மாவிலை முதலியனவால் பல்லைத் தேய்த்துவிட்டு, சீயக்காய். நெல்லிக்காய், முதலியனவால் தேகத்தைத் தேய்த்து, பாத்திரத்தினால் ஜலத்தை யெடுத்து கரையிலிருந்து தேகத்தை அலம்பிவிட்டு, ஜலத்தில் இறங்கி 32 தடவை முழுகிவிட்டு தலையைத் துடைத்து அக்காலத்தில் உபயோகப் படுத்தின பாத்திரங்களையும் புளி மண் சாம்பல்களினால் 32 தடவை சுத்திசெய்து, வஸ்திரங்களையும் 32 தடவை நனைத்து, மறுபடியும் 32 தடவை ஸ்நாநம் செய்யவேண்டும்.

பிறகு, தலை தேகங்களை துவட்டிக்கொண்டு தன் பர்த்தாவையே மனத்தினால் நினைத்துக் கொண்டு வேறு புருஷனைப் பார்க்காமல் வீட்டிற்கு வரவேண்டும். வழியில் வேறு புருஷனைப் பார்த்துவிட்டால், சூரியனைப் பார்க்க வேண்டும். ஸ்த்ரீகள் ஸ்நாநம் பண்ணின தினத்தில் சிறு குழந்தைகளைப் பார்த்தால் அந்த சிசுக்களுக்கு கஷ்டம் உண்டாகும். ஏதாவது ஆகாரம் சாப்பிட்ட பிறகு பார்க்கலாம்.

ஸ்நானம்செய்த தினத்தில் வீட்டில் சமயல் செய்வதும், தேவபாத்திரங்களை தொடுவதும் கூடாது. ஸங்கடமான காலத்தில் மறுபடியும் ஸ்நாநம் பண்ணிவிட்டு பர்த்தாவுக்கு சமயல் பண்ணலாம். பகவானுக்கு அதை நிவேதநம் பண்ணக்கூடாது. ஸ்த்ரீகள் நாடகம் பார்ப்பது, சூதாடுவது முதலிய கெட்ட காரியங்களை ஒரு காலத்திலும் செய்யக்கூடாது. சுமங்கலியான ஸ்த்ரீகள் பர்த்தாவினுடைய அனுமதியில்லாமல் தானாகவே ஏகாதசி உபவாஸம் முதலான ஓர் வ்ருதானுஷ்டானங்களையும் செய்யக்கூடாது. தானாக உபவாஸமிருந்தால் பர்த்தாவினுடைய ஆயுள் குறைந்துபோகும். சுமங்கலிகள் ஏகாதசி முதலான தினங்களில் புஷ்பம் சந்தனங்களைத் தரிக்கலாம்.

தான் பால்யத்தில் பஞ்ச ஸம்ஸ்காரம்பெற்ற ஆசாரியனிடத்திலாவது, மற்றும் ஜ்ஞானம், அனுஷ்டானம், வைராக்கியமுடைய ஆசாரியனிடத்திலாவது, தத்வஜ்ஞானங்களை உபதேசிக்கப் பெற்று தேகம் இந்திரியங்கள் ஸ்வாதீனமாக விருக்கிற சமயத்தில் தானாகவோ அல்லது ஆசிரியன் மூலமாகவோ பரஸமர்ப்பணத்தைச் செய்துகொள்ளுவதும் அவசியமாகும். மற்றும் பதிவிருதைகளுடைய தர்மங்களை ஸீதை ஸாவித்ரீ முதலானவர்களுடைய சரித்திரங்களைக் கேட்டு விஸ்தாரமாக தெரிந்து அனுஷ்டிக்கவும்.

விதவைகளின் தர்மம்

விதவையான ஸ்த்ரீயானவள் பர்த்தா இறந்துபோன 10-வது தினத்தில் தலையை முண்டனம் பண்ணிக்கொள்ளவேண்டும். பிறகும் ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி மாதங்கள் தவிர, மற்ற மாதங்களில், நிஷித்த திதி, வாரம், நக்ஷத்திரம் இல்லாத சமயங்களில் க்ஷௌரம் செய்துகொள்ளலாம். பஞ்ச ஸம்ஸ்காரம் ஆகாமலிருந்தால் ஜ்ஞானம் அனுஷ்டானங்களையுடைய ஆசாரியனை ஆச்ரயித்து பஞ்ச ஸம்ஸ்காரத்தை அடைந்துகொள்ளவேண்டும். விதவைகள் சூரியன் உதயத்திற்கு ஓர் யாமம் முந்தியே படுக்கையை விட்டு எழுந்திருந்து முன் சொல்லியபடி காலை அலம்பி 2 தடவை ஆசமனம் செய்து பகவந்நாம கீர்த்தனைகளைச் செய்யவும். விதவையான ஸ்த்ரீகள் மலத்தை விட்டால் குதஸ்தாநத்தில் 48 தடவை மண்ணைப்போட்டு அலம்பவேண்டும். ஜலத்தை விட்டால் குஹ்யஸ்தாநத்தில் 12 தடவை மண்ணைப் போட்டு அலம்பவேண்டும்.

விதவைகள் ருதுவாகி ஸ்நாநம்பண்ணினால் கால், கை குஹ்யஸ்தலங்களில் 128 தடவை மண்போட்டு அலம்பி, 128 தடவை ஸ்நாநம் பண்ணி உலர்ந்த வஸ்திரம் தரித்து மறுபடியும் 128 தடவை ஸ்நாநம் பண்ணவேண்டும். விதவைகள் க்ஷௌரம் செய்துகொண்டால் 52 தடவை ஸ்நாநம் பண்ணி உலர்ந்த வஸ்திரம் தரித்து, மறுபடியும் 52 தடவை ஸ்நாநம் பண்ணவேண்டும். உலர்ந்த வஸ்திரமில்லாத காலத்தில் ஈர வஸ்திரத்தில் 7 காற்று அடிக்கச்செய்தால் அதுவே உலர்ந்த வஸ்திரத்திற்கு ஸமானமாகும்.

கீழ்ச் சொன்ன சௌசங்களை இரவில் பாதி செய்யவும். சக்தியில்லாதவர்கள், ரோகிஷ்டர்கள் முடிந்தவரையில் செய்யலாம்.

விதவைகள் பல் துலக்கக்கூடாது. 12 தடவை வாயைக் கொப்பளித்து நாக்கை வழிக்கலாம். சூரியன் உதயமான பிறகு ஸங்கல்பித்துக்கொண்டு தினந்தோறும் சிரஸ் ஸ்நாநத்தையே அஷ்டாக்ஷரத்தைச் சொல்லிச் செய்யவேண்டும். பிறகு ஆசமனம் பண்ணிவிட்டு பர்த்தாவினுடைய கோத்திரத்தைச் சொல்லி—கோத்திரம்—சர்மாணம்—மமபர்தாரம்—தர்ப்பயாமி யென்று மூன்றுகை ஜலத்தையும் பர்து : பிதரம் தர்ப்பயாமி யென்று மூன்றுகை ஜலத்தையும், பர்த்து : பிதாமஹம் தர்ப்பயாமி யென்று மூன்றுகை ஜலத்தையும் இருகையையும் சேர்த்து பித்ரு தீர்த்தத்தினால் விடவேண்டும்.

பிறகு ஆசமனம் பண்ணி தலையை துவட்டிக்கொண்டு உலர்ந்த வஸ்திரங்களை இடுப்பில் வேறும், இடுப்புக்கு மேல் பாகத்திற்கு வேறொரு வஸ்திரமுமாக தரித்து, காலை அலம்பி ஆசமனம்செய்து முன் சொல்லியபடி ஊர்த்வபுண்ட்ரம், ஸ்ரீசூர்ணம், ஜபம், பகவத்வந்தனங்களையும் செய்து, பகவானுக்கென்றே ஸங்கல்பித்து பாகத்தைப்பண்ணி, புத்திரன் முதலானவர்கள் ஆராதனம் செய்தால் அதற்கு வேண்டிய உபசாரங்களைச் செய்து தீர்த்தம் துளசிகளை ஸ்வீகரித்து பக்தியோடு பகவானை பலதடவை நமஸ்கரிக்கவும். புத்ரா

திகள் ஆராதனம் செய்யாவிட்டால் தன் ஆசாரியன் உபதேசித்தபடிதானே திருவாராதனம் செய்யலாம். ஸாளக்கிராமத்தைத் தொடாமல் ஆராதிக்கவேண்டும். பிறகு அதிதிகள் வந்தால் அவர்களுக்கு பக்தியோடு அன்னமிட்டு சாப்பிட்ட பிறகுதான் புஜிக்கவேண்டும்.

விடவேண்டியவைகள்

விதவைகள் இரவில் சாப்பிடக்கூடாது. முடியாதவர்கள் பழம் முதலியவைகளை சாப்பிடலாம். சந்தனம், புஷ்பம் தரிப்பது, வெற்றிலை போடுவது, கட்டிலின்மேல் படுப்பது, கண்ணாடி பார்ப்பது, எண்ணை தேய்த்துக்கொள்வது, க்ஷௌரம் செய்துகொள்ளாமலிருப்பது. நாடகம், நர்த்தனம் பார்ப்பது, சங்கீதம் கேட்பது, பிறரை தூஷிப்பது, சூதாடுவது, பர்த்தா மாமனார் முதலானவர்களை தூஷிப்பது, மதகரமான ஆகாரங்களில் ஆசை வைப்பது காமவார்த்தைகளைப் பேசுவது, ஷடி கதைகளைப் படிப்பது, அந்ய புருஷனோடு பேசுவது, மற்றும் சிகப்பு வஸ்த்ரம் தரிப்பது முதலான நிஷித்த காரியங்களைச் செய்யக்கூடாது.

அவசியம் செய்யவேண்டியவைகள்

தினந்தோறும், சிரஸ்நாநம், ஜபம் முதலிய நித்யகர்மங்களைச் செய்வது, ஏகாதசி உபவாஸமிருப்பது, முடிந்தவரையில் புண்யதீர்த்தங்கள் க்ஷேத்திரங்களுக்கும் யாத்திரை செய்வது, உத்ஸவகாலங்களில் கூட்டங்களில் புகுராமல் பகவானை ஸேவிப்பது, ப்ரதக்ஷிணம் செய்வது, பகவத்ஸன்னிதிகளில் பெருக்குவது, மெழுகுவது, கோலமிடுவது, துளஸி வளர்ப்பது, பாகவதர்களைக்கண்டால் நமஸ்கரிப்பது, உசிதமாகவும், சக்திக் கனுகுணமாகவும் அவர்களுக்கு உபகரிப்பது, பெரியோர்களிடம் ஜ்ஞானம், பக்தி, வைராக்யம் மற்றும் ஆத்மகுணங்கள் விருத்தியடையக்கூடிய ஸ்ரீ பாகவதம் முதலான புராணங்களையும், இதிஹாஸங்களையும் கேட்டு கேட்டபடி நடப்பது, தான் செய்யும் ஸர்வ காரியங்களையும் ஸாத்விகத்யாகத்தோடு செய்வது, மற்றும் ஓர் க்ஷணகாலமும் வீணாகாதபடி பகவந்நாம ஸங்கீர்த்தனம் முதலான நல்ல காரியங்களையே செய்யவேண்டும்.

விசேஷ ஜ்ஞாநசக்திகளிருந்தால் தானாகவே ஆத்ம ரக்ஷாபரத்தை ஸர்வேச்வரனிடத்தில் ஸமர்ப்பிக்கலாம். ஜ்ஞாநசக்தி குறைவாயிருந்தால், ஆசாரியன் மூலமாகவாவது, பரத்தை ஸமர்ப்பித்து பின்பு கவலையற்று யதாசக்தி பகவத் பாகவத ஆசார்ய கைங்கர்யங்களைப் பண்ணிக்கொண்டு சாதகவருத்தியாக இருக்குமவர்கள் இவ்வுலகத்திலும் ஸாதுக்களால் கொண்டாடப்பட்டு, பிறகு ஸ்ரீ வைகுண்டத்திலும் ஸ்ரீமானான நாராயணனோடு ஸமானமாக ஸர்வாநந்தங்களையுமனுபவித்து அவ்வாநந்த பரீவாகமான நித்ய கைங்கர்யங்களையடைந்து வாழ்வார்கள்.

மற்றும் விஸ்தாரமாக ஸ்த்ரீகளுடைய தர்மங்களைத் தெரிந்து கொள்ள ஆசையுள்ளவர்கள் தர்மசாஸ்திரங்களிலும், இதிஹாஸ புராணங்களிலும் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[மன்மத ஸூ உத்தராயணம் வஸந்த ருது வ்ருஷபமீ 1955ஸூ மே-ஜூன்மீ]

15-5-55	வைகாசிமீ 1வ	ஞாயிற்றுக்கிழமை	சூன்யதிதி
16-5-55	2வ	திங்கட்கிழமை	வ்ருஷப க்ருஷ்ண தசமி திதி
17-5-55	3வ	செவ்வாய்க்கிழமை	ஏகாதசி திதி
18-5-55	4வ	புதன்கிழமை	ஏகாதசி வ்ரதம், த்வாதசி திதி
20-5-55	6வ	வெள்ளிக்கிழமை	பரணி, 39-வது பட்டம் ஸ்ரீ பராங்குச யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
21-5-55	7வ	சனிக்கிழமை	அமாவாஸ்யை
27-5-55	13வ	வெள்ளிக்கிழமை	ஷஷ்டி - ஸப்தமி திதித்வயம்
28-5-55	14வ	சனிக்கிழமை	அஷ்டமி திதி
31-5-55	17வ	செவ்வாய்க்கிழமை	ஏகாதசி திதி
1-6-55	18வ	புதன்கிழமை	ஏகாதசிவ்ரதம்; த்வாதசி திதி
2-6-55	19வ	வியாழக்கிழமை	அதிதி
3-6-55	20வ	வெள்ளிக்கிழமை	விசாகம்; நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்
5-6-55	22வ	ஞாயிற்றுக்கிழமை	பூர்ணிமை
6-6-55	23வ	திங்கட்கிழமை	கேட்டை; 35-வது பட்டம் ஸ்ரீ ரங்கநாத யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
11-6-55	28வ	சனிக்கிழமை	அவிட்டம்; 27-வது பட்டம் ஸ்ரீவீரராகவ வேதாந்தயதீந்த்ரமஹாதேசிகன்திருநக்ஷத்ரம்
13-6-55	30வ	திங்கட்கிழமை	வ்ருஷபக்ருஷ்ண அஷ்டமி திதி
14-6-55	31வ	செவ்வாய்க்கிழமை	நவமி திதி

[உத்தராயணம்-க்ரீஷ்மருது-மிதுநமீ]

15-6-55	ஆனிமீ 1வ	புதன்கிழமை	மிதுநரவி-4-13, ஷடசீதி; ஸங்க்ரமண தர்ப்பணம், சூன்யதிதி
16-6-55	2வ	வியாழக்கிழமை	ஏகாதசிவ்ரதம்; சூன்யதிதி
17-6-55	3வ	வெள்ளிக்கிழமை	மிதுநக்ருஷ்ணத்வாதசிதிதி
18-6-55	4வ	சனிக்கிழமை	த்ரயோதசி-சதுர்தசி திதித்வயம்
19-6-55	5வ	ஞாயிற்றுக்கிழமை	அமாவாஸ்யை
20-6-55	6வ	திங்கட்கிழமை	ப்ரதமைதிதி, சூர்யக்ரஹணம்
30-6-55	16வ	வியாழக்கிழமை	ஏகாதசி; சயநஏகாதசி; ஸ்வாதி; பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்

ஸ்ரீ:

திருப்பாவைக் கதை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஒரு விலங்கு எங்கே, நீலமேகச்யாமளமாய் உத்தமோத்தமமான திருமேனியையுடைய ஸர்வேச்வரன் எங்கே. இவனுக்கு அது உபமானமென்பது சிறிதாவது பொருந்துமா? அதுபோல் இவனென்பது பெருந்தவறல்லவா; பெரும் பாபமல்லவா? என்று சிலர் ஸந்தேகப்படக்கூடும். அதை நிவ்ருத்தி பண்ணுவதற்காக இச்சொல்லை இங்கு உபயோகித்தாள். "இந்த உபமானம் மிகத்தாழ்ந்தது என்பது உண்மையே. இது எங்களுக்குத் தெரியாத விஷயமன்று. ஆயினும் கருத்தைக் கூடிய வரையில் தெளிவாக அறிவிப்பதற்கு உலகத்திலுள்ள பொருள்களைத்தானே உபமானமாக்க முடியும்? இவ்வுலகத்திலில்லாததாயும் ஒருவருக்கும் தெரியாததாயுமிருக்கிற ஒன்றை எடுத்துக் கூறமுடியாதே. ஆகையால் இப்போது நாங்கள் சொல்லக்கருதிய கம்பீரமான தோற்றத்திற்கும் அழகுக்கும் இவ்வுலகத்தில் உபமானமாவதற்குத் தகுதியுள்ளது சிங்கமொன்றே. ஆகையால் இதைக்கூற வேண்டியதாயிற்று. ஆதி கவியும் இதைக்கூறியிருக்கின்றாரன்றோ. ஆகவே இங்குத் தவறுமில்லை, பாவமுமில்லை, என்று கருதினாள்.

இது முன்னோர்கள் கூறிய கருத்து. மற்றொன்றும் கூறலாம். "ஓ எம்பெருமானே, உன்னைக் காண ஒருவராலுமாகாது. உனது உருவம் கண்ணுக்கெட்டாதது, என்று சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. இப்படிச் சொன்னதெல்லாம் உனது இயற்கை உருவத்தைப் பற்றியது. உன்னைக் கண்டல்லது தரித்திருக்க முடியாத நிலையை அடைந்த உனதடியார்களின் மீது மிக்க கருணையுள்ள நீ அவர்கள் இவ்வுலகிலேயே இக்கண்களாலேயே நேராகக் கண்டுகளிக்கும் வண்ணம் காயாம்பூவண்ணமான இந்த திவ்ய உருவில் வந்து அவதரித்திருக்கின்றாய். இதை எந்த எந்த நிலையில் ஸேவிக்க ஆச்ரிதர்கள் விரும்புகின்றார்களோ அந்தந்த நிலையில் அதை வைத்து நீ ஸேவை ஸாதித்தருளவேண்டும். இப்போது நாங்கள் அதைச் சயனித்திருப்பது முதலிய பல நிலைகளில் ஸேவித்த பிறகு ஸஞ்சார நிலையில் ஸேவிக்க விரும்புகின்றோம். ஆகையால் நீ உன் கோயில் நின்றிங்ஙனே போந்தருள்" என்று விண்ணப்பம் செய்தாள்.

'உன் கோயில் நின்றும் போந்தருள்' என்றாள். அதைக்கேட்ட எம்பெருமான் இங்கிருந்து எங்கே வரவேண்டுமென்று கேட்டான். அதற்குப் பதிலாக இங்ஙனே என்று சொல்லிக் கையினால் ஆஸ்தான மண்டபத்தை நாயகப் பெண் சுட்டிக்காட்டினாள்.

ஸ்ரீ கிருஷ்ணன்:— அங்கு வந்து அதன் பிறகு என்ன செய்யவேண்டும்?

நாயகப்பெண்:—கோப்புடைய சீரிய சிங்காசனத்தில் எழுந்தருளியிருக்கவேண்டும்.

பள்ளியறையில் கட்டில் என்கிற சயன ஆஸநம் இருப்பதுபோல் ஆஸ்தான மண்டபத்தில் தர்ம கார்யங்களைப் பார்ப்பதற்காக ஸிம்ஹாஸநம் இருக்கின்றது. வெவ்வேறு காரியத்திற்கு வெவ்வேறு ஆஸநத்திலன்றோ ராஜாதிராஜர்கள் அமர்ந்திருப்பார்கள். ஆகையால் ஓ எம்பெருமானே, நீ இப்போது இந்தக் கட்டிலை விட்டிறங்கி ஸிம்ஹகதியில் இந்த ஆஸ்தான மண்டபத்திற்கு வந்து அங்குள்ள உத்தம ஸிம்ஹாஸநத்தில் எழுந்தருளியிருக்கவேண்டும்.

அந்த ஸிம்ஹாஸநம் எப்படியிருக்கிறதென்பதைச் சொல்லுகின்றேன். கேட்டருள். அடியில் கால்கள். அவற்றின் மேல் உயர்ந்து நான்கு கோணமுள்ள உடல். அதன் மேல் பீடம். அதில் நான்கு மூலைகளிலும் கம்பக் கால்கள். அவற்றின் மேல் விமானம். அதில் கலசங்கள். என்றிப்படிப் பல அவயவங்கள் அதற்கு

உண்டு. அவை எல்லாம் தனித்தனியே செய்யப்பட்டு பிறகு ஒன்றோடொன்றாக இணைக்கப்படும். இந்த இணைப்பு ஆணி அடித்து மறுபடி தனித்தனியே கழற்ற முடியாதபடி இருக்காது. அப்படி ஸ்திரமாக இணைக்கப்பட்டால் ஸிம்ஹாஸநத்தை வேண்டியபோது வெவ்வேறு இடத்திற்குக் கொண்டுபோக முடியாது. ஆகவே அவச்யமானபோது தனித் தனியே கழற்றும்படியாகவும் மறுபடி உடனே ஜோடிக்கும் படியாகவும் அவை இருக்கும். இப்படி அவயவங்கள் தனித்தனியே பிரித்து எடுக்கக் கூடியவையாயிருந்தாலும் ஜோடித்திருக்கும்போது வேற்றுமை ஒன்றும் தோன்றாது. அவ்வளவு வேலைப்பாடுள்ளதாக ஒவ்வொரு பாகமும் செய்யப்பட்டிருக்கும். இப்போது இங்கு நீ வீற்றிருப்பதற்காகப் போடப்பட்டிருக்கும் ஸிம்ஹாஸனம் இவ்விதமானதே. கைதேர்ந்த வேலைக்காரர்களால் வெகு திறமையாக நிர்மாணிக்கப்பட்ட பாகங்களால் இணைக்கப்பட்டு இது வேறு அது வேறு என்பது சிறிதும் தோன்றாமல் ஒரே வஸ்துவினால் ஆக்கப்பட்ட ஒரே பொருள் என்னும்படி அது விளங்குகின்றது. இப்படிச் சிறந்த இணைப்பு (கோப்பு) உடையது அது.

தங்கம், வெள்ளி, நாநாவித ரத்நங்கள், தந்தம், பல வர்ணப் பட்டுக்கள், இவைகளைக் கொண்டு செய்யக்கூடிய எல்லாப் பரிஷ்காரங்களும், பக்ஷிகள் கொடிகள் பூக்கள் ப்ரதிமைகள் என்ற இவை போன்ற அலங்காரங்களும் செய்யப்பெற்று மிகச் சீரியதாக இருக்கின்றது அது. பளபளவென் றுஜ்வலிக்கின்றது. அதில் வந்து நீ எழுந்தருளியிருக்கவேண்டும்.

ஸ்ரீ கிருஷ்ணன்—ரொம்ப ஸரி. அப்படியே செய்கிறேன். அதன் பிறகு?

நாயகப்பெண்—யாம் வந்த காரியம் ஆராய்ந்தருள். நாங்கள் ஒரு கார்யத்தை உத்தேசித்து உன்னிடம் வந்திருக்கின்றோம். அதை நீ ஸிம்ஹாஸநத்தில் எழுந்தருளின பிறகு விஜ்ஞாபநம் செய்கின்றோம். அதைக் கேட்டு அது உசிதமா அன்றா என்று ஆராய்ந்து (ஆலோசித்துப்) பார். உசிதமென்று தோன்றினால் அதன்படிசெய் அநுசிதமென்று தோன்றினால் அதைச் சொல். உன் தீர்மானப்படி நடக்க நாங்கள் காத்துக்கொண்டிருக்கின்றோம்.

முதல் நாளே இப்பெண்கள் கிருஷ்ணனிடம் சென்று தாம் நோன்பு நோற்க உத்தேசிப்பதையும் அது அவனுடைய கிருபையினாலேயே நிறைவேறவேண்டுமென்பதையும் விண்ணப்பம் செய்து அவ்விஷயத்தில் அவனுடைய அங்கீகாரத்தைப் பெற்று வந்திருக்கின்றார்கள். ஆகையால் "நாங்கள் நேற்று வேண்டிக்கொண்ட காரியத்தைப் பூர்த்தி செய்யவேண்டும்" என்று அவர்கள் இப்போது கூறியிருக்கலாம். ஆனால் அப்படி ப்ரார்த்திப்பதை அவர்கள் ந்யாயமாகக் கருதவில்லை. நேற்று செய்த விண்ணப்பம் அது. அதை அவன் அங்கீகரித்தான். ஆகிலும் பிறகு என்ன நடந்திருக்குமோ! நேற்று நினைத்தபடி செய்ய இப்போது ஸௌகர்யமில்லாமலுமிருக்கலாம். ஆகையால் முதல் நாள் தாங்கள் உதவி கேட்டதையும் அவன் அதைச் செய்ய அங்கீகரித்ததையும் ஜ்ஞாபகப்படுத்தி, "அதற்காக நாங்கள் வந்திருக்கின்றோம். அந்த உதவியை நீ செய்ய வேண்டும்" என்று கண்டிதமாய்க் கேட்காமல் இப்போதுதான் ப்ரார்த்திப்பது போலவும் அதை ஆலோசித்து அவன் அவனுடைய திருவுள்ளப்படி செய்யலாம் என்கிற நிலையே உள்ளது போலவும் வைத்து 'யாம் வந்த காரியமாராய்ந்தருள்' என்றாள். எம்பெருமானுடைய ஸந்நிதியில் தமது தாழ்வையும் பணிவையும் காட்டிக்கொண்டு இப்படிப் பேசினாள்.

ரிக் வேதத்தில்—

प्रतद् विष्णुः स्तवते वीर्येण
मृगो न भीमः कुचरो गिरिष्ठाः ।
यस्योरुषु त्रिषु विक्रमणेषु
अधिक्षियन्ति भुवनानि विश्वा ॥

என்று இம்மந்த்ரம் படிக்கப்படுகிறது. இதில், "எவருடைய மூன்று பெரிய அடிகளில் எல்லா உலகங்களும் நிலை பெற்றிருக்கின்ற

னவோ அப்பேர்ப்பட்டவரான விஷ்ணு பகவான் அவருடைய வீர்யர் காரணமாகஸ்தோத்ரம் செய்யப்படுகின்றார்'' என்பது இரண்டாவது தவிர மற்ற மூன்று அடிகளின் பொருள். இரண்டாவது அடியில் 'பயங்கரமான ம்ருகம் போலே' என்ற உபமானம் கொடுக்கப்பட்டிருக்கின்றது 'இந்த பயங்கரமான மிருகம்' ஸிம்ஹமே என்பதில் ஸந்தேஹமிருக்க இடமில்லை. இனி இதற்குள்ள இரண்டு விசேஷணங்களில் ஒன்றான 'கிரிஷ்டா:' என்பதற்கு 'மலையில் இருக்கின்ற' என்பது அர்த்தம் என்பதும் ஸ்பஷ்டம். மற்றொரு விசேஷணமான 'குசர:' என்பதின் அர்த்தத்தை விசாரிக்க வேண்டியிருக்கிறது. 'ஹிம்ஸையாகிற நீச கர்மாவைச் செய்கின்ற' என்றாவது 'போகமுடியாத இடங்களில் ஸஞ்சரிக்கின்ற' என்றாவது அதன் அர்த்தம் என்று நிருக்தகாரரானயாஸ்கர் முதலான வ்யாக்யாநகாரர்கள் கூறியிருக்கின்றனர். ஆனால் எம்பெருமானுடைய அவதார ரஹஸ்யத்தை ஸம்ப்ரதாயக்ரமமாக உள்ளபடி அறிந்தவளாகையால் இந்த நாயகப் பெண் அந்த வைதிக உபமானத்தின் உண்மை அர்த்தத்தை இங்கு விளங்கவைத்திருக்கின்றாளென்று தோன்றுகின்றது. 'மாரிமலை முழஞ்சில் மன்னிக்கிடந்துறங்கும்' என்பது 'கிரிஷ்டா:' என்பதின் பொருள். 'புறப்பட்டுப் போதருமாபோலே' என்பது 'குசர:' என்றதற்கு ஸம்பந்தப்பட்ட பொருளெனத் தகும். இப்பதத்திற்கு ஸாக்ஷாத் அர்த்தம் "பூமியில் ஸஞ்சாரம் செய்கின்ற" என்பது. பர்வதத்தின்மேல் இருக்கும் ஸிம்ஹம் பூமியில் ஸஞ்சரிப்பதானால் பர்வதத்தில் தான் இருக்கும் இடத்திலிருந்து புறப்பட்டு வந்து தானே ஸஞ்சரிக்கவேண்டும். ஆகையால் 'பர்வதத்தில் வஸிப்பதாய் பூமியில் ஸஞ்சரிக்கின்றதான சிங்கம்போல்' என்கிற மந்த்ரத்திற்கு 'பர்வதத்தில் வஸிப்பதாய் அங்கிருந்து புறப்பட்டு வந்து பூமியில் ஸஞ்சாரம் செய்கின்ற சிங்கம் போல்' என்றதிலேயே தாத்பர்யம். த்ரிவிக்ரமாவதாரத்தைப்பற்றிச் சொல்லுகிறது இம்மந்த்ரம். இதில் இந்த உபமானத்தால் பகவான் ஸர்வோந்நதமான பரமபதத்திலிருந்து புறப்பட்டு வந்து இப்பூலோகத்தில் அவதரித்ததின் சிறப்புக் காட்டப்படுகின்றது. பாஷ்யத்திலேயே 'கிரிஷ்டா:' என்பதற்குப் பகவான் விஷயத்தில் பர்வதம் போல் உயர்ந்திருக்கிற லோகத்தில் இருப்பவர்' என்ற அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் 'குசர:' என்பதற்கு 'சத்ருவதம் முதலிய குத்ஸிதகர்மாவைச் செய்கின்றவர்' அல்லது மூன்று உலகங்களிலும் ஸஞ்சரிப்பவர்' என்று அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. அவதாரத்தைப் பற்றிப் பேசுமிடத்தில் ப்ரதானமாய் அதனுலேயே 'பரித்ராணாய ஸாதூநாம்' என்று முதலில் சொல்லப்பட்ட ஆச்ரிதரக்ஷணத்தைப் பேசாமல் சத்ருவதத்தைப் பேசுவது உசிதமன்று. அதையும் குத்ஸிதம் அல்லது க்ரூரம் என்று பேசுவது உசிதமன்று அப்படியே 'இந்தப் பூலோகத்தில் ஸஞ்சரிப்பவன்' என்ற பொருளை விட்டு 'மூன்று லோகங்களிலும் ஸஞ்சரிப்பவன்' என்று கூறினதும் பொருத்தமுள்ளதன்று. ஸம்ப்ரதாயக்ரமமாக அவதாரத்தின் பெருமை அறியப்படாமையாலே ஏதோ ஒரு விதமாக வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது.

मृगो न भीमः कुचरो गिरिष्ठाः
परावत आजगन्था परस्याः

என்று இன்னொரு மந்த்ரத்திலேயும் இதே உபமானம் காணப்படுகின்றது. அதில் பர்வதத்தில் வஸிக்கின்றதாய் பிறகு பூமியில் வந்து ஸஞ்சரிக்கின்றதான, ஸஞ்சரிக்க விரும்புகின்றதான சிங்கம் போல் நீ வெகு தூரமான இடத்திலிருந்து வந்தாய் என்ற பொருள் வெகு அழகாகவும் ஸ்வாரஸ்யமுள்ளதாகவும் இருக்கின்றது. ஆனால் வ்யாக்யானகாரர்கள் ம்ருகம் என்கிற ஸிம்ஹம் போல் நீ பயங்கரனாயிருக்கின்றாய். வெகு தூரமான இடத்திலிருந்து வந்தாய்? என்று இரண்டு வாக்யமாக அன்வயித்திருக்கின்றார்கள். ஒரு வாக்யமாய் அன்வயிப்பதே ஸ்வாரஸ்யமானது. ஆகையால் ப்ராக்ருதத்தில் எம்பெருமான்

சயன அறையிலுள்ள கட்டிலிலிருந்து இறங்கிப் புறப்பட்டு வருவதற்கு உபமானமாக பர்வதத்திலிருந்து ஸிம்ஹம் புறப்பட்டு வருவதைச் சொன்ன பெண் எம்பெருமானுடைய அவதாரத்திற்கு வேதம் கூறிய உபமானத்தின் கருத்தை உள்ளபடி விளக்கினதாக ஆகின்றது.

24. அன்று

அப்படிப் பெண்களால் ப்ரார்த்திக்கப்பட்ட ஸ்ரீகிருஷ்ணன் கட்டிலை விட்டிறங்கி ஸிம்ஹாஸநத்தில் எழுந்தருளியிருப்பதற்கேற்றபடி நப்பின்னைப் பிராட்டி ஸித்தமாக வைத்திருந்த வஸ்த்ர பூஷணங்களையெல்லாம் ஏற்று தரித்துக்கொண்டு மணி பாதுகைகளில் திருவடிகளை வைத்து ஸிம்ஹகதியில் நடந்து வந்து

वैदर्भनिर्दिष्टमसौ कुमारः
क्लृप्तेन सोपानपथेन मञ्चम् ।
शिलाविभङ्गैर्मृगराजशाव-
स्तुङ्गं नगोत्सङ्गमिवारुरोह ॥

என்றும்

परार्ध्यवर्णास्तरणोपपन्न-
मासेदिवान् रत्नवदासनं सः ।

என்றும் மஹாகவி அஜ மஹாராஜன் விஷயத்தில் வர்ணித்தபடி வெகு கம்பீரமாகப் படிகளின் மீது அடிகளை வைத்து ஏறி ஆஸநத்தில் அமர்ந்து அத்புதமாக ஸேவை ஸாதித்தான். அவனைச் சுற்றியிருந்து கண்குளிர ஸேவித்துக்கொண்டு வந்த பெண்கள் எம்பெருமான் ஸிம்ஹாஸநத்தில் எழுந்தருளின உடனே ப்ரணமம் பண்ணி எழுந்து நின்று கைகுவித்து மங்களாசாஸநம் பண்ணினார்கள். அதில் அவனைப் பற்றிப் பொதுவாக ஜய விஜயீபவ என்று மட்டும் சொல்வது போதாது என்று கருதி அவன் உலகத்திற்குச் செய்யும் அநுக்ரஹங்களையெல்லாம் திருவடிகளாலும் திருக்கைகளாலும் செய்கின்றானாகையால் அவற்றை விசேஷித்துக் குறிப்பிட்டுப் போற்றுகின்றார்கள். திருவடிகளால் அநுக்ரஹம் செய்த முதல் அவதாரம் த்ரிவிக்ரமாவதாரமாகையால் அதுவே முதல் ஸ்தானம் பெறுகின்றது.

ஹிரண்ய கசிபு ராவணன் முதலியவர்கள் போல் பலி சக்ரவர்த்தி உலகத்திற்கு அவ்வளவு ஹிம்ஸை செய்யவில்லை. ஆயினும் யஜ்ஞம் தானம் தபஸ்ஸு என்கிற இந்த நல்ல கார்யங்களைச் செய்து வெகு பலமுள்ளவனாகி இந்திரன், வருணன், குபேரன் முதலிய தேவச்ரேஷ்டர்களுக்குக் கூட எவ்வித பதவியும் அதிகாரமும் இல்லையென்னும்படியான நிலையை உண்டாக்கி எல்லா உலகங்களுக்கும் தானே அரசனானான். இந்த அவமானத்தை ஸகிக்கமாட்டாமல் தேவர்கள் பகவானிடத்தில் சரணாகதி பண்ணி பலி சக்ரவர்த்தியை அடக்கவேண்டுமென்று ப்ரார்த்தித்தார்கள். அந்த ஸமயத்தில் கச்சப ப்ரஜாபதியும் அவர் பத்னியான அதிதியும் வெகு காலம் தபஸ்ஸு பண்ணி, அதனால் ஸந்தோஷமடைந்த பகவான் ஸாக்ஷாத்தாகத் தோன்றி என்ன வரம் வேண்டுமென்று கேட்டபோது நீயே எங்களுக்குப் புத்ரனாக வந்து பிறக்கவேண்டுமென்று கேட்டார்கள். அப்படியே பிறந்து வாமனன் என்னும் ப்ரஹ்மசாரியாகிப் பலி சக்ரவர்த்தியின் யஜ்ஞ சாலைக்குச் சென்று மூன்றடி மண் யாசித்து, விஷயத்தை உள்ளபடியறிந்து சுக்ராசார்யர் தடுத்ததை லக்ஷ்யம் செய்யாமல் பலி அப்படியே அதைக் கொடுக்க அந்த க்ஷணமே 'ஆழியெழ' என்று முன் எடுத்துக்காட்டியபடி வளர்ந்து ஒரு அடியால் கீழ் உலகங்களையும் மற்றோர் அடியால் மேல் உலகங்களையும் அளந்து விட்டு மூன்றாவது அடி எங்கே வைப்பது என்று கேட்டு, பலி சக்ரவர்த்தி தனது தலையைக்காட்ட அதன் மேல் வைத்து ஒரு வித ஹிம்ஸையுமில்லாமல் அவனைப் பாதாள உலகத்தில் சேர்த்து காலக்ரமத்தில் அவனுக்கு நல்ல கதி உண்டாகுமென்று அநுக்ரஹம் பண்ணினான் எம்பெருமான். அந்த வ்யாஜத்தினால் நாமிருக்கும் இந்த உலகம் முழுவதும்

चराचरमचीकरश्चरणपङ्कजेनाङ्कितम्

என்றபடி அந்தத் திருவடி ஸம்பந்தம் பெற்றதைப் பாராட்டி 'அன்றிவ்வுலகமளந்தாய் அடிபோற்றி' என்றார்கள்.

(தொடரும்)

|| श्रीः ||

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

श्रीमते श्रीवण्शठकोप श्री वीरराघवशठकोप यतीन्द्रमहादेशिकाय नमः

ஸ்ரீ அஹோபிலமடம் திவ்யாஸ்தானத்தில்

37–வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த

ஸ்ரீ பிள்ளைப்பாக்கம் அழகியசிங்கர்

ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ வீரராகவஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய

பட்டாபிஷேக ஸ்ரீமுகம் (உரையுடன்)

श्रीवीरराघवश्रीणां शठकोपश्रियामपि । ऐक्यं व्यङ्क्तुमिवोद्यन्तं मूर्त्या तं मुनिमाश्रये ॥

ஸ்ரீ பிள்ளைப்பாக்கம் அழகியசிங்கர் பூர்வாச்ரமத்தில் போல் ஸன்யாஸாச்ரமத்திலும் அதிவிலக்ஷணமாய் எழுந்தருளி இருந்ததற்குத் தகுந்தவாறு அம் மஹான் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹாஸ்தானத்திற்கு எழுந்தருளியதும் தாம் ஆஸ்தானத்தை அங்கீகரித்ததற்கு அடையாளமாக நானுதேசங்களுக்குப் பட்டாபிஷேக ஸ்ரீமுகம் அனுப்பவேண்டிய ஸமயத்தில் தம்முடைய சரித்திரத்தைத் தாமே 30 ச்லோகங்களால் கவனம் செய்து பட்டாபிஷேக ஸ்ரீமுகம் அமைத்து அனுப்பியாயிருந்தது. ஸம்ஸ்க்ருதபாஷையிலுள்ள அதிகம்பீரமான அந்த சரித்திரவைபவத்தை ஸம்ஸ்க்ருதபரிசயமில்லாதவர்களும் அனுபவிக்குமாறு அந்த ச்லோகங்களை எழுதி அவற்றின் தாத்பர்யத்தை எளிய தமிழ் பாஷையில் எடுத்துரைக்கிறோம். இவ்வழகியசிங்கருடைய சரித்திரத்தின் சில பாகங்கள் இந்த ச்லோகங்களில் அடங்காமையால் அவற்றை அவ்வோ விடங்களில் எழுதி ச்லோகங்களின் தாத்பர்யம் எழுதப்படுகிறது.

இம் மஹான் கலியுகம் 4945 (Ad. 1845) குரோதி ஸ்ரீ மாசிமீ சுக்லபக்ஷத்வாதசி திதியுடன் கூடிய புஷ்யநக்ஷத்ரத்தில் நம் ஸ்ரீபாஷ்யகாரருடைய அவதாரஸ்தலமான ஸ்ரீ பெரும்பூதூர் என்கிற திவ்யக்ஷேத்ரத்திற்கு இரண்டுமைல் தென்கிழக்கிலுள்ளபிள்ளைப்பாக்கம் என்கிற அக்ரஹாரத்தில் கௌசிககோத்ரத்தில் கோமாண்டூர் இளையவில்லி வம்சத்திலுதித்து வேதவேதாந்தவிசக்ஷணராயும், ஸத்கர்மாநுஷ்டாதாவாயும் எழுந்தருளியிருந்த ஸ்ரீ வீரராகவாசார்யர் என்கிற ஸ்வாமியின் தர்மபத்நியாயும், இளநகர் திருமலை கட்டம் ஸ்ரீநிவாஸதாதாசார்யர் என்கிற பரமைகாந்திஸார்வபௌமருடைய புத்ரியுமான ஸ்ரீ கநகவல்லி என்கிற பெண்மணியிடத்தில் ஆவிர்ப்பவித்தருளி ஸ்ரீ கோபாலாசார்யர் என்கிற திருநாமத்துடன் விளங்கிவந்தார். இந்த விஷயம்—

श्रीवीरराघवगुरोस्तनयं तत्त्वविद्वरम् । कौशिकान्वयसंभूतं गोपालार्यमहं भजे ॥ என்றும்,

एष स्यादित्यहेतोः शठरिपुशठजिल्लक्ष्मणाभ्यां मुनिभ्यां
श्रीमद्भ्यां प्रेक्ष्य शिष्टं श्रुतिशिकरयुगे श्रीरहस्यत्रयार्थे ।

विख्यातं शब्दतन्त्रे कणचरणकथादिष्वभिज्ञं शमादि-
क्षीराब्धिं कौशिकश्रीरघुवरतनयं नौमि गोपालसूरिम् ॥

என்றுப் இரண்டு ச்லோகங்களால் ஸ்ரீ அழகியசிங்கருடைய பூர்வாச்ரமபாகினேயரான ஸ்ரீ உப. இளநகர் கட்டம் ஸ்ரீசைலதேசிகதாதாசார்யஸ்வாமியால் அநுஸந்திக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இவற்றில் இரண்டாவது ச்லோகத்தை ஸ்ரீ அழகியசிங்கரின் பூர்வாச்ரமத்தில் காலக்ஷேபம் செய்தவர்கள் தனியனாக அநுஸந்தித்து வந்தார்கள்.

இவருக்கு மாதாபிதாக்கள் முதலில் வைத்த திருநாமம் ஸ்ரீ ராஜகோபாலன் என்று பிற்காலத்தில் அது குறுகி கோபாலாசார்யர் என்ற மட்டில் நின்றுவிட்டது. இதற்கு ஒரு காரணத்தை ஸ்ரீ அழகியசிங்கர் தாமே உத்ப்ரேக்ஷித்து ஒரு ச்லோகத்தால் ஸாதித்தாயிருக்கிறது. அதாவது– ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கரின் ஸந்நிதியில் தாம் ஸ்ரீகார்ய கைங்கர்யம் பார்த்து வந்தபோது ஸ்ரீ வீரராகவனுடைய கைங்கர்யவிஷயத்தில் ஸ்ரீ அழகியசிங்கரின் நியமனவாக்கை அப்படியே பரிபாலனம் பண்ணுகிறவர் (गो– வாக்கை पालः– பரிபாலிப்பவர்) என்று கோபாலாசார்யர் என்ற திருநாமம் ஏற்பட்டிருக்கலாம் என்று. அந்த *ச்லோகம் நம் ஸ்ரீ அழகியசிங்கர் செய்தருளிய ஆசார்யஸப்ததியில் 9–வது ச்லோகம்.

பின் இவர் பிதாவால் உபநீதராய் ஸதாசாரங்களில் நன்கு விநீதராய் பிதாவிடமே க்ரமாந்தம் வேதாத்யயனம் செய்து 33–வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருவடிகளில் ஆச்ரயித்துப் பஞ்சஸம்ஸ்காரத்தைப் பெற்று ஸ்ரீபாஷ்யத்தையும் அதிகரித்தார். ஆனால் அது அப்போது பூர்ணமாகவில்லை. பின் இப்படி விச்சின்னமான பாகத்தையும், மற்றும் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் முதலிய க்ரந்தங்களையும் ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் ஸந்நிதியில் பூர்ணமாக அதிகரித்து வேதாந்தத்தில் நல்ல தேர்ச்சி பெற்று, ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கராலேயே ந்யாஸவித்யாநுஷ்டானமும் செய்விக்கப்பெற்று, அக்காலத்திலும் அடுத்த பட்டம் ஸ்ரீ களத்தூர் அழகியசிங்கரின் காலத்திலும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதியிலும், ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதியிலும் ஸ்ரீகார்ய கைங்கர்யத்தில் ஈடுபட்டு திருவெவ்வுளூரிலேயே எழுந்தருளியிருந்தார். அதற்குப் பின் ஸ்ரீ களத்தூர் அழகியசிங்கரும் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளியதும் நம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ பாஷ்யகாரரின் அவதாரஸ்தலமான ஸ்ரீபெரும்பூதூரையே தமக்கு வாஸஸ்தலமாக அமைத்துக்கொண்டு ஸ்ரீபாஷ்யகாரரின் திருமேனி ஸேவையில் ஈடுபட்டு **यतिराजभोगम्** என்று ஒரு ஸ்தோத்ரத்தை அருளிச்செய்து அதை

---

* यस्मिन्नादौ पितृभ्यां प्रथितयदुपतेश्चम्पकारण्यभाजः
संजातं राजगोपाल इति पदमथ श्रोत्रिये ब्रह्मनिष्ठे ।
गोपालाख्यैव सिद्धा विदितविविधवाच्यद्य हृद्ये यतीन्द्रे
किंगेहेन्द्रस्य किंकृत्युपकृतिकनकेष्वार्यवाक्पालनार्थम् ॥ आचार्यसप्तति– 9

எப்பொழுதும் அநுஸந்தித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தாயிற்று. அந்த ஸமயத்தில் தான் அவ்வூர் வாஸிகளான காழியூர் ஸ்ரீரங்காசார்யர் முதலான சில தென்னாசார்யஸம்ப்ரதாயஸ்தர்களும் நம் ஸ்வாமியிடம் குணங்களால் தாஸ்யத்தை வஹித்து வ்யாகரணத்தில் சப்தேந்துசேகரம், மஹாபாஷ்யம் முதலிய க்ரந்தங்களை பூர்ணமாக வாசித்தார்கள்.

இந்த சரித்ரத்தில் இங்கிருந்து தான் பட்டாபிஷேக ஸ்ரீமுகச்லோகங்கள் துடங்குகின்றன.

कदाचिच्छ्रीनरहरौ स्वाराद्धजनवर्जिते । श्रीवण्शठारिमुनिना कश्चिद्यत्नः प्रचक्रमे ॥

ஒரு ஸமயம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹாஸ்தானத்தை நிர்வஹிக்கத் தகுந்தவர்கள் இல்லையென நினைத்து ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் ஒரு ப்ரயத்னம் செய்யலானார்.

सद्यः प्रस्थाप्य गाथाप्रवचननिपुणस्वात्मकाचार्यदेशं
नीत्वा भक्तप्रबन्धं मधुरकविकृतं लक्ष्मणान्तादिकं च ।
कन्यामास्यात्मतारे क्वचन शरदि तेनात्मनानुप्रविश्य
प्रेम्णोपादेशयन्मे नृहरिपदमयश्रीशठारिश्चवास्यै ॥

இப்படி வ்யாகரணசாஸ்த்ரப்ரவசனம் செய்துகொண்டிருக்கும் இவருக்கு திவ்யப்ரபந்தம் ஸதாசார்யமுகமாகக் கிட்டவேண்டுமென்ற திருவுள்ளத்தால் காயார் என்கிற அக்ரஹாரத்திற்கு இவரை உடனே எழுந்தருளும்படி செய்து அங்கு தற்சமயம் எழுந்தருளியிருந்த பரமைகாந்திஸார்வபௌமரான ஸ்ரீ சடகோபாசார்யஸ்வாமியிடம் ஸர்வதாரி வருஷ புரட்டாசிமீ ஜ்யேஷ்டாநக்ஷத்ரத்தில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹாஸ்தானரூபமான ஸ்ரீசடகோபஸ்ரீயின் லாபத்திற்காகக் கண்ணிநுண் சிறுத்தாம்பு துடக்கமாக ஆழ்வார் ப்ரபந்தங்களையும் இராமாநுஜ நூற்றந்தாதியையும் அத்யயனம் செய்யும்படி ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் செய்தருளினார். 2

सन्धायैनं प्रबन्धं प्रतिदिनमनुसन्धाप्य तत्सेवनोत्कं
दासं कृत्वा विकृत्याह्वयशरदि निजे कन्यकामासि यात्राम् ।
आरभ्याहीन्द्रपुर्यां श्रुतिशिखरगुरोरुत्सवादीन्निषेव्य
श्रीमद्रङ्गं क्रमेणानयत दिननिशापङ्क्तिनामोत्सवादौ ॥

இப்படி அத்யயனம் செய்த ப்ரபந்தங்களை மனத்தில் தரிக்கும்படி செய்தும், ப்ரதிதினம் ஆதரத்துடன் அநுஸந்திக்கும்படி செய்வித்தும் அதன்மூலம் இந்த ப்ரபந்தத்ரஷ்டாவான நம்மாழ்வாரை (ஆழ்வார்திருநகரியில்) ஸேவிக்கவேண்டுமென்ற அவாவை உண்டாக்கியும் விக்ருதி வருஷ புரட்டாசிமீ யாத்ரையை ஸங்கல்பித்து, திருவஹீந்த்ரபுரத்தில் ஸ்ரீ வேதாந்ததேசிகனுடைய உத்ஸவத்தை ஸேவிக்கும்படி செய்து க்ரமமாக (திவ்யதேசம் தோறும் மூன்று நாட்கள் தங்கியிருந்து எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்துகொண்டு) அவ்வருஷம் ஸ்ரீரங்கத்தில் பகல்பத்து இராப்பத்து உத்ஸவங்களை ஸேவிப்

பிக்கத் திருவுள்ளம்பற்றி பகல் பத்து உத்ஸவாரம்பத்திலேயே ஸ்ரீரங்கம் எழுந்தருளும்படி செய்யலாயிற்று. 3

द्वौ मासौ रङ्गनाथं शरणमुपनयन्पौषतीर्थोत्सवान्तं
गोष्ठीनाथं सपूर्णं शरशयनहरिं वारिधौ सेतुवीक्षाम् ।
प्रापय्य श्रीनगर्यां शठरिपुमुनिमप्येतदर्चावतारे
माघे मास्युत्सवाहेष्वनयत शरणं तत्प्रबन्धानुबन्धैः ॥

ஸ்ரீரங்கத்தில் இரண்டு மாதம் எழுந்தருளியிருந்து பெரியபெருமாளை மங்களாசாஸனம் பண்ணும்படி செய்து தை மாதத்திய ப்ரஹ்மோத்ஸவத்தையும் அவப்ருதாந்தமாக ஸேவிக்கும்படி செய்து, பின் (திருமெய்யம் மார்க்கமாக) திருக்கோட்டியூர் எழுந்தருளி கோஷ்டிநாதனையும், திருக்கோட்டியூர் நம்பிகளையும் ஸேவிக்கச் செய்து (அங்கு கோஷ்டிநாதன் விஷயமாக பட்டர் அருளிச்செய்த க்ரமத்தில் ஒரு ஸ்தோத்ரத்தையும் அருளிச்செய்யும்படி செய்து) பின் திருப்புல்லாணி யெம்பெருமானையும் ஸேவித்து ஸேதுதர்சனமும் முடிந்தவாறே திருநகரிக்கு எழுந்தருளி ஸ்ரீநம்மாழ்வாரை மாசி மாதத்திய அவருடைய ப்ரஹ்மோத்ஸவத்தில் அவருடைய ப்ரபந்தாநுஸந்தானத்தின் மூலம் மங்களாசாஸனம் செய்யும்படியும் செய்துவைக்கலாயிற்று. 4

तत्र स्वस्मिंश्शठारेः प्रसदनविभिदां हंसमुद्राङ्कनादिं
सन्दर्श्यास्यावतारस्थलमभिगमयन्पद्मनेत्रादिकांश्च ।
स्वस्थाने स्वस्य चर्यानुदिनभजनयुक्छ्रीशठार्यङ्घ्रिसेवां
निन्येह्नां विंशतौ सन्मधुरकविवचोऽनेकसाहस्रजप्यैः ॥

அங்கு தம் விஷயத்தில் (ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன்விஷயத்தில்) ஸ்ரீநம்மாழ்வார் செய்தருளிய அநுக்ரஹரூபமான, ஆழ்வார் ஆதிநாதன் ஸன்னிதிகளில் இராக்காலத்தில் ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனைக்கொண்டு ஹம்ஸமுத்ரையால் கதவுகளுக்கு முத்ரையிடுதல் முதலியதையும் (இந்த கார்யம் இப்போதும் ஸ்ரீ அஹோபிலமடத்தின் மூலம் நடந்துவருகிறது.) ஸேவிக்கும்படி செய்தும் ஸ்ரீநம்மாழ்வாரின் அவதாரஸ்தலமான திருநகரி ஸமீபத்தில் வடகிழக்கில் தாம்ரபர்ணிக்கு வடக்குக்கரையில் இருக்கும் அப்பன் கோயிலையும் மற்றும் அதற்கு ஸமீபத்திலிருக்கும் ஒன்பது (நவ திருப்பதி) எம்பெருமான்களையும் மங்களாசாஸனம் செய்துவைத்தும், இவ்விதம் இருபது நாட்கள் திருநகரியில் ஸ்ரீ ஆழ்வாருடைய திநசர்யாக்ரமங்களை உதயம் முதல் ராத்ரி வரையில் ஒன்றும் விடாமல் ப்ரதிதினமும் ஸ்ரீமதுரகவிக்ருதியான கண்ணிநுண்சிறுத்தாம்பை அனேக ஆயிரம்தரம் ஆவ்ருத்தி செய்துகொண்டு அநுபவிக்கும்படியும் செய்துவைக்கலாயிற்று. 5

एवं नत्वा शठारिं प्रसदनवसनाद्यस्य दत्तं गृहीत्वा
तोताद्रीशं प्रणम्य क्रमश उपगतः श्रीकुरङ्गेशपूर्णम् ।
यस्यापूर्वावतारश्शठरिपुमुनिरित्युच्यते विद्वदग्र्यैः
यत्क्षेत्रे रङ्गनाथादिमशठजिदिति ख्यात आचार्य आसीत् ॥

ஸ்ரீ:

நற்போது போக்கு

உயர் குலம், கட்டழகு, இளமை, கல்வி, செல்வம் இவையாவும் மனிதற்கு மதத்தை உண்டுபண்ணக்கூடியவை யென்பது, லோகாநுபவம் அறிந்த பெரியோர்கள் அருளியிருக்கும் பொன்மொழி. இவைகளில் ஒன்றே போதும் ஒருவனுடைய புத்தியை நாசஞ் செய்ய. இவைகள் யாவும் ஒருங்கே ஒருவனிடம் அமையுமாயின் கேட்கவே வேண்டாம். இவையிருக்குமிடத்தில் புத்தி நாசமும், தர்மாதர்ம விவேகத்துக்கு லோபமும், அவ்வழியில் செலவும் உண்டாகும் என்பது வெளிப்படை. அஹங்காரத்துக்கு இவை அடிப்படையாதலால், சூரபத்மன், ராவணன், கம்ஸன், ஹிரண்யன், வாலி, துர்யோதநாதி நூற்றுவர், மதுகைடபர், மஹாபலி, ஸோமுகன், கீசகன், திரிபுரர், தக்ஷன் முதலியோர் இன்னொருவரால் கொல்லப்படுகிறவர்களா? இவர்களின் வலிமை, தீரம், வரப்ரஸாதங்கள், பராக்ரமம், பாரிப்பு, ஆண்மை, பெருமை, எ ண் ண ம், எழில் முதலியவை எங்கே போயின? அவரவர் கோபதாபங்களும் டம்பமும் இறுமாப்பும் கர்வமும் அஹங்காரங்களுமே அவரவர்களை அழித்தொழித்தன. இக்காலத்திலும் குலமதம் வித்யாமதம் தநமதம் உள்ளவ்யக்திகள் பலர் இருக்கக்காண்கிறோம். இதுமாத்ரமல்ல; கலிகோலாஹலக்ரீடை நடமாடாத யுகாந்தரங்களில் வாழ்ந்துவந்த முனிவர்களையும் ஆக்ரஹமும் அஹங்காரமும் மதமும் விட்டபாடில்லை. இதனை ஓர் உபாக்யான முகத்தால் விளக்குவோம்.

கங்கா நதிக்கரையை அடுத்து ஒரு பெரிய வனம். அவ்வனத்தில் பாரத்வாஜர் ரைப்யர் என்று இரண்டு ரிஷிகள் தவம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். இவர்கள் இருவரும் இயற்கையில மித்ரர்கள். ஆனால் ரைப்யர் ஸ்வபாவத்தில் கோபிஷ்டர்; பாரத்வாஜர் சாந்தசமதமாதி குணங்கள் கொண்டவர்; பாவச்செயல்களுக்குப் பயந்தவர். இருவரும் நேர்மாறான குணங்கள் கொண்டவராயினும், எப்படியோ மனவேற்றுமையின்றி ஒற்றுமையுடன் வாழ்ந்துவந்தார்கள்.

இவர்களுள் ரைப்யருக்குப் பராவஸு அர்வாவஸு என்று இரண்டு புத்ரர்கள். பாரத்வாஜருக்கு யவக்ரீதன் என்று ஒரே புத்ரன். ரைப்யர் மிகுந்த கல்விமான் சாஸ்த்ரங்களின் கரை கடந்தவர்; ஆனதுபற்றி அவர் புத்ரர்களும் வித்யாவான்களாக விளங்கினார்கள். பாரத்வாஜருக்கும் அவரது குமாரருக்கும் வைதுஷ்யம் அவ்வளவாக இல்லை. ரைப்யர் வித்வானாயிருந்தபடியால் அவரிடம் அநேக சிஷ்யர்கள் வந்து ஆஶ்ரயித்தார்கள். இவ்வாறு வந்தவர்கள் ரைப்யரை அடுத்து அவருக்கு மர்யாதை செய்வார்களே தவிர, அவர்கள் பாரத்வாஜரிடம் போவதேயில்லை. 'ஐயோ! ரைப்யருக்கு மாத்ரம் இவ்வளவு ஸத்காரங்கள் நடக்கின்றனவே; நமது பிதாவுக்கு ஒன்றுமில்லையே! அவர் மதிக்கவும் படவில்லையே! என்று அதைப் பார்த்த யவக்ரீதன் மனம் வருந்தலானான். மனவருத்தத்தை மாத்ரம் அவன் அடைந்தானே தவிர, அவர்களைப்போல் தானும் கல்வி கற்றுத் தேர்ச்சியடைய வேண்டுமென்னும் எண்ணம் அவன்பால் உதிக்கவில்லை. என் செய்வான் பாவம்! வரவர அவன் மனத்தின் தாபம் முற்றத்தொடங்கியது. கடைசியாக அவன் „கடுந்தவத்தைச் செய்து தேவதைகளை ஆராதித்து ஏராளமான வித்யையை ஒரே காலத்தில் அடைந்துவிடவேண்டும்" என்று ஒரு முடிவுக்கு வந்தான். அதன்படியே அவன் நிர்மாநுஷ்யமான ஒரு வனத்துக்குச் சென்று தேவேந்த்ரனைக் குறித்து அதிகோரமான ஒரு தவத்தைச் செய்யலானான். இந்த்ரன் அவனது தவத்துக்கு உவந்து ப்ரஸன்னனாய் நிற்க, யவக்ரீதன், "தேவர் தலைவ! அடியேன் இதுகாறும் கல்லாது காலங்கழித்து வந்தேன்; தவம் முதலானவைகளும் கல்விக்கு நிகராகாதென்பது என் எண்ணம். இனி அடிமுதல் கலைகளை அப்யஸித்துப் புலமை யெய்துதலும் என்றால் இயலாது; அந்த விளம்பத்தையும் நான் ஸஹியேன். நுமது அநுக்ரஹத்தால் அடியேன் வித்யை யாவற்றையும் ஏககாலத்தில் பெற்று வல்லவனாகும்படி செய்தல் வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டான். அதற்கு இந்த்ரன், "விப்ரரிஷியே! என்ன! யோசனையில்லாமல் வரம் கேட்கிறீர்! வித்யாஸம்பாதநத்துக்குநீர் சொல்

னும் வழி சரியானதன்று; வீணில் ஏன் காயக்லேசம் பண்ணிக்கொள்ளுகிறீர்? உமக்கு வித்யை வரவேண்டுமானால், உமது இருப்பிடம் சென்று ஒரு நல்லாசிரியரைத்தேடி அவரிடமிருந்து வித்யையைக்ரஹித்துக்கொள்ளும், அதுதான் தக்கவழி, அதைவிட்டுத் தவத்தினால் வித்யைப் பெறுவதென்பது இயலாத கார்யம்'' என்று சொல்லிவிட்டு இந்த்ரன் அந்தர்த்தானமானான்.

யோசித்தான் யவக்ரீதன். இந்த்ரன் கூறிய மறுமொழிகள் அவனுக்குக் கொஞ்சங்கூட ஆறுதலை அளிக்கவில்லை. தன் இஷ்டத்தைப் பூர்த்திசெய்துகொள்வதில் யவக்ரீதன் ஆக்ரஹமும் பிடிவாதமும் கொண்டிருந்தமையால் அவன் விடாப்பிடியாக மீண்டும் இந்த்ரனைக் குறித்து முன்னிலும் கடுமையாகத் தவஞ்செய்யத் தொடங்கினான். மறுபடியும் இந்த்ரன் அவனுக்குக் காட்சியளித்து, "யவக்ரீத! ஆகாத கார்யத்தில் ஆக்ரஹம் கொண்டு என்ன பயன்? உமது மனோரதம் இந்த உபாயத்தால் ஆகாது. நான் முற்கூறியபடியே செய்யும்'' என்று சொல்லி அவனைத் தவத்தினின்றும் தடுத்தான். எவ்வளவு தடுத்தும் யவக்ரீதன் சலிக்கவில்லை. அவனுடைய விடாப்பிடியையும் தளரா முயற்சியையுங் கண்ட இந்திரன், இவன் இப்படிச்சொன்னால் கேட்கமாட்டான்; இவனை வேறோர் உபாயத்தால் தடுக்கவேண்டு''மென்று எண்ணங்கொண்டு, க்ஷயரோகத்தால் நொந்து தளர்ந்த ஒரு கிழப் பிராமண வடிவங்கொண்டு, இந்த யவக்ரீதன் வழக்கமாய் இறங்கும் கங்கைத் துறையில் இறங்கி, மணலைப் பிடிப்பிடியாக எடுத்துத் தண்ணீரில் இறைத்துக்கொண்டேயிருந்தான். அங்கே ஸ்நாநத்துக்கு வந்த யவக்ரீதன், இந்த வ்ருத்த வேதியன் செய்கையைப் பார்த்து, "ஸ்வாமி! என்ன நோக்கங்கொண்டு இந்த மணலை நீரில் போடுகிறீர்?'' என்று கேட்டான். அதற்கு அவ்வேதியன், "ஐயா! இந்தக் கங்கை, நீர் நிறைந்து ஜனங்களால் கடப்பதற்கு முடியாதிருக்கிறது. இந்நீரில் மணலைக் கையால் பிடிப்பிடியாக வாரிப்போட்டு ஓர் அணையைக்கட்டி அதன்மூலம் ஜனங்களுக்கு ஒரு ஸௌகர்யத்தைச்செய்யலாமென்று இவ்வாறு செய்கிறேன், வேறொன்றுமில்லை'' என்று பதில் சொன்னான். இதைக்கேட்ட யவக்ரீதன் சிரித்து, "வ்ருத்தரே! மூப்பின் முதிர்ச்சியால் அறிவிழந்து இச்செயல் செய்கிறீர் என்றெண்ணுகிறேன். கங்கையின் ப்ரவாஹம் அளவற்றது; இது அகாதமானது. உமது மணல் முஷ்டிகளால் இதன் ஆழம் என்றைக்கு நிரம்பும்? அஸாத்யமான கார்யத்தைச் செய்கிறீர், உமது வீட்டுக்குப் போய், ஏதேனும் உபயோகமான ஒரு கார்யத்தைச்செய்யும். எழுந்திரும், எழுந்திரும்'' என்றான்.

அப்போது அந்த வ்ருத்தன், "தபஸ்ஸினால் எல்லாவித்யைகளையும் ஸாதித்துக்கொள்ளலாமென்கிற புத்தி உமக்கிருக்கும்போது, நான் செய்யும் இந்த செயல்தானா குற்றமாகும்? மணல் முஷ்டிகளால் கங்காப்ரவாஹத்தைத் தடுப்பது எவ்வளவு பொருத்தமாகுமோ அவ்வளவு பொருத்தமானது தபஸ்ஸினால் கல்விக்கடலைத் தாண்டுவது'' என்று சொல்ல, யவக்ரீதன், இவ்வேதியனை இந்த்ரனென்றும் அறிந்துகொண்டு, "பாகசாஸனரே! நான் செய்யும் தவத்தொழில் தப்பிதமென்று உமது மனத்தில் தோன்றினால், இக்கணமே அதை நிறுத்திவிடுகிறேன். எவ்விதத்திலாவது எனக்கும் என் பிதாவுக்கும் வைதுஷ்யம் வரும்படியாய் அநுக்ரஹிக்கவேண்டும்'' என்று இரந்து கேட்டுக்கொண்டான். இந்த்ரன் அவன் வேண்டுகோட்கிணங்கி'' உமக்கும் உமது பிதாவுக்கும் நீர் விரும்பியவண்ணமே ஸகல வித்யைகளும் விளங்கட்டும்'' என்று அநுக்ரஹித்தான்.

வரத்தால் வித்யாபாரங்கதனான யவக்ரீதன் தன் பிதாவினிடம் வந்து "அப்பா! தபஸ்ஸால் ஸகல வித்யைகளையும் அடைந்து வந்திருக்கிறேன். ரைப்யருக்கும் அவர் பிள்ளைகளுக்கும் தெரிந்த வித்யைகளைக் காட்டிலும் பன்மடங்கு வித்யைகளை நாம் அறிவோம்'' என்று பெருமை பாராட்டினான்.

பரமஸாத்விகரான பாரத்வாஜர், "இவனோ பால்யன்; போதாக்குறைக்குத் தபஸ்ஸினால் வித்யையை அடைந்து விட்டான். ஸாத்விக ஸ்வபாவம் இல்லாதவர் வித்யையும் அடைந்துவிட்டால் அது குரங்கின்கைக் கொள்ளியாகுமே!'' எனப் பயந்து "அடேயவக்ரீதா! நீ வித்யைகளைப்பெற்று வந்ததில் எனக்கு ஸந்தோஷமே. அதனால் நீ அஹங்காரமடைந்து விநயமில்லாமல் செருக்குக் கொண்டாயானால் உன்னை அது கெடுத்துவிடுமே. நீ இப்போது

இருக்குமிருப்பைப் பார்த்தால், இப்போதே ரைப்யரிடம் போய் அவரை அவமதிப்பாய் போல் தோன்றுகிறதே! அவரோ மிக்க கோபிஷ்டராயிற்றே! உன்னுடைய கர்வத்தையும் அவிநயத்தையும் பார்த்து உன்னைச் சபித்து நாசம்செய்துவிடுவரே! அவரிடம் ஒருபோதும் போகாதே, உனக்கு நன்மையைச் சொல்லுகிறேன்'' என்று பரிதாபத்துடன் அவனைக் கேட்டுக்கொண்டார்.

"பாதமறை வெவ்வரவினுக்குப்
பாலுநெய்யும் புகட்டிடினும்
வாதைபண்ணும் வல்விடமே
வளருமாப்போல் மனுநூலும்
வேதமவை யோராயிரமும்
விளங்குங்கலையும் தசக்கிரீவன்
ஓதவோதப் போதங்கெட்
டபோதமான தோங்கியதே''

[இராமாயணம்—உத்தரகாண்டம்
வரையெடுத்த படலம்-16]

[இதன் பொருள்] கால்கள் மறையப் பெற்றுள்ளதான கொடிய பாம்புக்கு இனிய பாலையும் நெய்யையுமே உணவாக உண்பித்தாலும், பிறர்க்குத் துன்பத்தைச் செய்கிற கொடிய விஷமே மிகுவதுபோல, மனுதர்ம சாஸ்த்ரத்தையும் மிகப் பலவான வேதங்களையும் மற்றும் உள்ள சாஸ்த்ரங்களையும் ராவணன் கற்கக்கற்க, நல்லுணர்வு உண்டாகாமால் இயற்கையான அவிவேகமே மேன்மேல் வளர்ந்து வந்தது. ('இராவணன் படித்துக் செட்டவன்; கற்றறி மோழை என்பதை இச் செய்புளில் விளக்கினர்.]

தாமஸ புத்தியுடையவனும், யௌவனத் திமிரும், வித்யா கர்வமும் கொண்டவனுமான யவக்ரீதன், ''அப்படியே செய்கிறேன்'' என்று பிதாவினிடம் ஒப்புக்கொண்டு, தன் மனம் போன போக்கின்படியே எல்லாரையும் தூஷித்துக்கொண்டும் பிதாவை ஒரு பொருளாக எண்ணுமலும் அவரை அவமதித்தும் வந்தான்.

இப்படியிருந்து வருகையில் அவன் ஒருநாள் ரைப்யருடைய ஆசிரமத்தருகில் போக நேர்ந்தது. அப்போது வஸந்தகாலம். அந்த ஆசிரமத்தைச் சுற்றிலும் பூந்தோட்டம். அதிலுள்ள புஷ்பங்கள் மலர்ந்து தேனைப் பெருக்கின. பூந்தாதுக்களில் அளைந்து மனக்களிப்ப வீசினது இன்னிளம் பூந்தென்றல். ஜிதேந்த்ரியர்களும் காமக்காதல் கொள்ளும்படியிருந்தது ரமணீயமான அந்தப்ரதேசம். அந்த இடத்தில் ரைப்யரின் நாட்டுப் பெண் [பராவஸுவின் பார்யை] தனியாக உலாவிக் கொண்டிருந்தாள். யவக்ரீதன் அவளுடைய ரூபலாவண்யங்களைக் கண்டு மோஹித்து, தான் செய்யப்புகும் அகார்யத்தை அகார்யம் என்று எண்ணுமல், வித்யாகர்வம் தலைமண்டையிட்டு அவளைப் பலாத்கரித்துப் போகிக்கத் தலைப்பட்டான். அவள் அவன் செய்யும் அகார்யத்தை ஸஹியாமல் 'ஓ' வென்று அலறிக் கொண்டு தன் மாமனரிடம் நடந்த செய்தியைத் தெரிவித்தாள். அது கேட்ட ரைப்யர் அடங்காக் கோபங்கொண்டு, தம் ஜடையிலிருந்து ஒரு ரோமத்தை எடுத்து அக்கினியில் ஹோமம் செய்து அதனல் ஒரு பூதத்தைப் படைத்து, அதனைப் பார்த்து, ஹே! பூதமே! நீ யவக்ரீதனைக் கொன்றுவிட்டு வா'' என்று கட்டளையிட்டார். அந்தப் பூதம் வெகு ஆர்ப்பாட்டத்துடன் யவக்ரீதனைத் துரத்தத் தொடங்கிற்று. அவன், தான் தப்பித்துக் கொள்ளப் பல விடங்களில் ஓடித் திரிந்தும் ரக்ஷணம் பெருமல், தன் பிதாவின் க்ருஹத்துக்கு ஓடிவந்து, அந்தப் பூதத்தால் செல்ல முடியாததொரு பரிசுத்த ஸ்தலத்தில் வந்து புகுந்து கொள்ளப் பார்த்தான். அந்த இடத்தை ஒரு சூத்ர அந்தகன் காவல் காத்துக் கொண்டிருந்தான். யவக்ரீதன் அந்த ஸ்தலத்துக்குள் ப்ரவேசிக்க முடியாதபடி அந்த அந்தகன் தடுத்தபடியால், யவக்ரீதன் அப் பூதத்தால் பிணிப்புண்டு, அந்த ஸ்தலத்துக்கு வெளியே கொலையுண்டு இறந்துபட்டான். அந்த ஸமயம் பாரத்வாஜர் நித்ய கர்மானுஷ்டானங்களுக்காக நதிக்குச் சென்றிருந்தார். அவர் திரும்பிவந்து பார்த்தவளவில் யவக்ரீதன் ப்ரேதமாயிருந்தது கண்டு, திடுக்கிட்டு, இதன் காரணத்தை அந்தகனை வினவ, அவன் அங்கே நடந்த வரலாற்றைச் சொன்னன். என்ன குற்றத்தினல் இவனுக்கு

இவ்வித மரணம் நேர்ந்த தென்பதைத் தீர விசாரியாமலே, பாரத்வாஜர் புத்ர சோகத்தால் பரிதபித்து, "ஐயோ! புத்ரனே பிறக்காமலிருப்பவர்களே பாக்யவான்கள். ஏனெனில்; புத்ர சோகம் இத்தன்மைய தென்பதை அவர்கள் அறிய மாட்டார்களன்றோ; அவர்கள் தம் இச்சையாக எங்கும் ஸஞ்சரிக்கிறார்கள். பெண்டு பிள்ளைகள் ஒரு கால் கட்டல்லவா?" என்றிவ்வாறெல்லாம் கதறியழுது, தாமும் மகனுடனே மரித்து விடுவதாக நிச்சயித்துப் பின் கோபாவேசம் தலைக்கொண்டு ரைப்யா! இப்பொழுது நான் ஜந்மாந்தர பாபத்தின் பலனால் புத்ர நாசத்தை அடைந்து அதனால் வருந்திப் பிராணனை விடுவதுபோல, எனக்கு இப்படிப் பட்ட தீங்கை விளைத்த நீயும் சீக்ரத்தில், உனது மூத்த புத்ரனால் நிரபராதியாக இருக்கையிலே அடிக்கப்பட்டு மரணத்தை யடைவாய்' என்று சபித்தார்.

சபித்தவுடன் சிறிது நேரம் சென்றதும் இவரது கோபக் கனல் தணிந்தது. அப்போது ஸாத்விகம் தலையெடுத்துப் பாச்சாத்தாபம் மேற்கொண்டு. 'ஐயோ! என்ன அகார்யம் செய்து விட்டோம்! யவக்ரீதன் தன் கர்மபலினால் மாண்டதற்கு ரைப்யர் என் செய்வார்? நாம் ஏன் அவரை சபிக்கவேண்டும்? இது அஜ்ஞானத்தின் கார்யமல்லவா? எனக்கு அவர் பரமமித்திரனன்றோ? புத்ர சோகத்தால் உண்டான புத்தி மாறுட்டமல்லவோ என்னை விட பாவி உலகில் வேருெருவன் உளனோ" சபிக்கும்படி தூண்டிற்று. என்று துக்கித்துக் கொண்டே அக்கினியில் விழுந்து உயிர் துறந்தார்.

தம்மால் விடுக்கப்பட்ட பூதம் யவக்ரீதனைக் கொன்றதும், யவக்ரீதனுடைய மரணம் தாங்க மாட்டாமல் பாரத்வாஜர் மரித்ததும் அறிந்த ரைப்யர் "நாம் என்ன செய்யலாம்? எல்லாம் கால வைபரீத்யம்" என்று ஒருவாறு தேறி, தம் புத்ரர்களுடன் ஸுகமாய்க் காலங் கழித்து வந்தார். பாரத்வாஜர் இட்ட சாபம் அவர் காதுக்கு எட்டவேயில்லை. அது அவருக்குத் தெரிய ஸந்தர்ப்பமே வாய்க்காமற் போயிற்று. பராவஸு எந்கெனவே யவக்ரீதனையும் அவன் தந்தையையும் வெறுத்துக் கொண்டிருந்தமையால் அவர்களின் மரணத்தில், அவன் துக்கமடையவில்லை. அர்வாவஸு மாத்ரம், இளகிய மனமுடையவனாதலால் அவர்களின் மரணத்துக்காக க்லேசப்பட்டு, கால க்ரமத்தில் அவன் ஸமாதானத்தை அடைந்து விட்டான்.

நாட்கள் பல சென்றன. ஒருநாள் ஓரரசன் தான் ஒரு யாகம் செய்யவேண்டுமென்ற எண்ணங்கொண்டு தன் குருவானரைப்யரிடம் வந்து தான் செய்யும் யாகத்தை நடத்தி வைக்கும்படி ப்ரார்த்தித்தான். ரைப்யர், தம் தேஹாஸக்தியால் அதை நடத்த முடியாமல் அதை முற்றும் நிர்விக்நமாக நடத்தும்படி தம் புத்திரர்களுக்குக் கட்டளையிட்டார். புத்ரர் இருவரும் தம் பிதாவையும் பத்நிகளையும் ஆசிரமத்தில் இருக்கச் செய்து, அரசனிடம் போய் யாகத்தை ஆரம்பித்து வைத்தார்கள். யாகம் ஒருவித குறைவுமின்றி நடந்து வருகிறது. அப்போது பராவஸு இரண்டொருநாள் தன் க்ருஹத்துக்கு வர விரும்பி அர்வாவஸுவை மீதியாகத்தை நடத்தி வரும்படி சொல்லி விட்டு அரசனுடைய அநுமதியையும் பெற்றுக் கொண்டு க்ருஹத்துக்கு வந்து விட்டான். ஒருநாள் நள்ளிரவில் பராவஸு தன் வீட்டை விட்டு வெளியில் வருகையில், தூரத்தில் க்ருஷ்ணஜிநத்தைப் போர்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த தன் பிதாவை ஏதோ ஒரு ம்ருகமென்று மாருக நினைத்துப் பாணத்தைப் பிரயோகித்தான். அவர் அதனால் அடிக்கப் பட்டவராய் அப்போதே உயிர் துறந்தார். பராவஸு யாகசாலைக்கு வந்து அர்வாவஸுவினிடம் "அப்பா! நான் தெரியாமல் தந்தையைக் கொன்று விட்டேன். அந்த ப்ரஹ்மஹத்தி தோஷம் என்னைச்சூழ்ந்து கொண்டது. யாகத்தை வேறு நான் முற்றுவிக்க வேண்டியவனாயிருக்கிறேன். நீ எனக்காக ஒன்று செய்ய வேண்டும். தந்தையைக் கொன்ற தோஷத்துக்கு நான் ப்ராயச்சித்தம் பண்ணிக் கொள்ள வேண்டியது அவச்யம். நீ தனிமையில் இவ் யாகத்தை நடப்பிக்க அசக்தன். எனக்காக

ப்ரஹ்மஹத்யா ப்ராயச்சித்தத்தை நீ அநுஷ்டித்து வா. நான் யாகத்தை நிர்வஹித்து வருகிறேன்'' என்ருன்.

தமையன் சொல்லைத் தட்டி நடக்கமாட்டாத அர்வாவஸு அதற்கு ஒப்புக்கொண்டு, ப்ராயச்சித்தத்தை சாஸ்த்ர விதிப்படி செய்து முடித்து, மீண்டும் யாக சாலையை அடைந்தான். அச்சாலை வாசலில் காத்துக் கொண்டிருந்த ஸேவகர்கள் ஸ்வரூப வித்யாஸத்தால் இவனை 'ப்ரஹ்மஹத்தி செய்தவன்' என்று எண்ணி யஜ்ஞவாடத்தில் செல்லவொட்டாது தடுத்தனர்; ப்ரஹ்மஹத்யை செய்தவன் நானல்லவென்று அர்வாவஸு பல படியாகச் சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. பராவஸுவும் இவனை உள்ளே அழைத்துக் கொள்வதற்கு ஒரு முயற்சியும் செய்யவில்லை. அவன் ஸ்வகார்ய பரனுகவே இருந்து விட்டான்.

அதன்மேல் அர்வாவஸு மிகுந்த வெறுப்பும் துக்கமும் கொண்டவனுய், தேவதைகளைக் குறித்துக் கடுந்தவம் செய்யத் தலைப்பட்டான். இவனுடைய ஸாத்விக குணத்துக்கும் தவத்துக்கும் இரங்கிய தேவதைகள் இவன் முன்னர்த் தோன்றி, ''அர்வாவஸோ! உன் தவத்துக்கு மெச்சி உன் முன்னர் ப்ரஸந்நமாயினேம். வேண்டிய வரத்தை கேட்டுக் கொள்'' என்றனர்.

அர்வாவஸு தன் ஸாத்விக குணத்துக்குத் தக்கபடி ,,தேவதைகாள்! ரைப்யர், பாரத்வாஜர், யவக்ரீதன் இம் மூவரும் உயிர் பெற்றெழ வேண்டும்; பராவஸு ப்ரஹ்ஹத்தி தோஷத்தினின்றும் நீங்க வேண்டும். இவ்விரண்டு வரங்களையும் அருள்க'' என்று கேட்டுக் கொண்டான். அப்படியே அவர்கள் அநுக்ரஹித்தார்கள். அதன் பயனுக அம் மூவரும் தூங்கி யெழுந்தவர்போல் உயிர் பெற்றெழுந்தனர். பராவஸுவும் தோஷம் நீங்கினவனுக ஆனுன். பாரத்வாஜரும் ரைப்யரும் மிக்க ஆநந்தம் கொண்டு முன்னிருந்த த்வேஷத்தை மறந்து உடலும் உயிரும் போல் அதிகமான மைத்ரத்துடன் வெகு காலம் வாழ்ந்து வந்தார்கள். இவர்களுடைய புத்ரர்களும் ஒரே தாயின் வயிற்றின் பிறந்த புதல்வர்கள் போல் வெகு அந்யோந்யமாயிருந்து வந்தார்கள்.

அட்டைப்படவிளக்கம்:— P. K. ராமபத்ரன், சிரோமணி.

ஸத்யவ்ரதக்ஷேத்ரமென்று மிக உயர்ந்ததாகப் போற்றப்படும் முத்திதரும் நகரேழில் முக்கியமாம் கச்சிதன்னில் ப்ரஹ்மாவின் அச்வமேதத்தில் யாகவேதியில் அவதரித்து, அவரை அநுக்ரஹித்தருளியும் பிற்காலத்திலுள்ளவர்களான ப்ரபந்நர்களுடைய ஸகல ஆர்த்திகளையும் போக்குவதற்காக அர்ச்சாரூபியாய் கரிகிரிமேல் நின்றனைத்தும் காக்கின்ற கண்ணன் உமதடிகளடைகின்றேனென்று ஒருக்காலுரைத்தவரை அமையுமினியென்பவர்போல் அஞ்சலெனக்கரம் வைத்து தமதனைத்துமவர்தமக்கு வழங்கியும் தாம் மிக கம்பீரமாக அட்டையில் விளங்குகிருர். இவ் வெம்பெருமானுக்கு தேவாதிராஜன், தேவப்பெருமக்ள், வரதராஜன், அருளாளன் எனப் பல திருநாமங்களுண்டு. நம் ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபகர்களான, திருக்கச்சிநம்பிகள், ஸ்ரீபாஷ்யகாரர், கூரத்தாழ்வான் முதலான ஆசார்யர்களுக்குத் தமது திவ்ய ரூபகுணுதிகளில் அளவற்ற ப்ரேமையை உண்டுபண்ணி, அவர்களைப் பலபடியாக அநுக்ரஹித்தும் அவர்களைக் கொண்டு ஸம்ப்ரதாயஸ்தாபனமும் செய்தருளிய இவ்வெம்பெருமான் ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகனிடம் விசேஷகடாக்ஷத்தைச் செய்தருளி, ஸ்வாமியைக்கொண்டு பிற்காலத்திய மதாந்தரஸ்தர்களை நூற்றுக்கதிகமான க்ரந்தமுகத்தாலும் நேரிலும் நிரஸிக்கும்படிபண்ணி அத் தூப்புல் வள்ளலால், 'ஹே! ஹஸ்திகிரிநாத! தேவரீரது திவ்யமங்களவிக்ரஹத்தின் அழகை இடைவிடாது அநுபவிக்கும் எனக்கு அளவிலாப் பேரின்பமளிக்கும் வைகுண்டவாஸத்தில் கூட ஆசையில்லை. இது ஸத்யம்' என்று ஆழங்காற்பட்டு பல ப்ரபந்தங்களாலும் ஸ்தோத்ரங்களாலும் மங்களாசாஸனம் பண்ணப்பட்டிருக்கிருர்.

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

14-4-55ல் ப்ராந்தியங்கரையில் ஸ்ரீ ஸ்ரீனிவாஸய்யங்கார் ஆராதித்தார். 15-4-55ல் ஊரார் ஆராதித்தார்கள். ராத்ரி டோலோத்ஸவத்தை ஸ்ரீ. ஸ்ரீனிவாஸய்யங்கார் நடத்திவைத்தார். அன்று காலை அவ்வூர் எழுந்தருளாநின்ற ஸ்ரீ ஸுந்தரராஜப் பெருமாளை திருவுள்ளப்படி நிச்சங்கமாக மங்களாசாஸனம் செய்தருள வேணுமென்ற கோயில் துறையாரின் ப்ரார்த்தனைக் கிணங்க ஸ்ரீ அழகியசிங்கரும் சத்ரசாமராதி விருதுகளுடன் எழுந்தருளி ஸ்ரீ சடகோபன் முன்னிலையில் அரவணைப்ரஸாதங்களுடன் கோயில் அதிகாரிகள் எதிர்கொள்ள கோயிலுக்கெழுந்தருளி ஸகல மரியாதைகளுடனும் ஸ்ரீ ஸுந்தரராஜனை மங்களாசாஸனம் பண்ணி, உபஹாரங்களுடன் பட்டும் ஸமர்பித்தாயிற்று. திருப்புகாலில் ஸ்ரீ அஹோபிலமடம் 40-வது பட்டம் ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகனால் ப்ரதிஷ்டை செய்விக்கப்பட்ட லக்ஷ்மீநரஸிம்மன் ஸன்னிதியில் எழுந்தருளியிருக்கும் சிங்கவேழ் குன்றமுடையானையும், ஸ்வாமிதேசிகனையும் வஸ்த்ரோபஹார ஸமர்ப்பண புரஸ்ஸரமாக மங்களாசாஸனம் பண்ணி ஆச்ரமமெழுந்தருளியாயிற்று. அன்று ராத்ரி ஸ்ரீ கஸ்தூரி அய்யங்காரின் ப்ரார்த்தனையின்பேரில் அவர் கிருஹத்திற்கு எழுந்தருளியாயிற்று. அது ஸமயம் ஊராரின் ப்ரார்த்தனையின்பேரில் பட்டணப் ப்ரவேச ரூபமாக வாண வேடிக்கைகளுடனும் வேத வாத்ய கோஷங்களுடனும் எழுந்தருளும்படியாயிருந்தது. 16-4-55ல் ஸ்ரீ கஸ்தூரி அய்யங்கார் திருமஞ்சனம் பண்ணிவைத்து பெருமாளை ஆராதித்தார். அன்று ராத்ரி கீழ்வேளூர் எழுந்தருளும்போது கோப்பூர் ஸ்ரீ ஸௌந்தரராஜ அய்யங்காரும், ஸ்ரீ கஸ்தூரி ரங்காசாரியரும் தங்கள் கிருஹங்களில் பல்லக்குடன் பெருமாளை எழுந்தருளப்பண்ணி முறையே 50, 25 ரூபாய்கள் ஸம்பாவனைச் செய்து கோஷ்டிக்கு சக்கரை, பழம் விநியோகமும் நடத்திப் போந்தார்கள். பிறகு 7 மைலுள்ள கீழ்வேளூர் எழுந்தருளியாயிற்று. 17-4-55ல் அவ்வூர் ஸ்ரீ தாமோதரய்யங்கார் பெருமாளை ஆராதித்து ராத்ரி டோலோத்ஸவமும் பண்ணிவைத்தார். அவ்விடத்திற்கே வந்து திருவாரூர் எழுந்தருளவேணுமென்று ஸ்ரீ ராஜகோபாலய்யங்கார் ப்ரார்த்தனை செய்ததற்கிணங்க அன்று ராத்ரி 8 மைலுள்ள திருவாரூர் விஜயபுரத்திலுள்ள அவர் க்ருஹத்திற்கெழுந்தருளினார். 18-4-55 முதல் 21-4-55 வரை ஸ்ரீ ராஜகோபாலய்யங்கார் ஏகதேசமாகவும், பரிபூர்ணமாகவும் பெருமாளை ஆராதித்தார். 18-4-55ல் பெரிய திருமஞ்சனம் கண்டருளப்பண்ணி 19-4-55ல் டோலோத்ஸவமும் பண்ணி வைத்தார். 21-4-55 ராத்ரி 9 மணிக்கு திருக்கண்ணமங்கை வாசிகள் திருவுள்ளத்திற்கு ஏற்ப ஸகல ஏற்பாடுகளும் செய்து இருக்கிறோம்; பக்தவத்ஸலனை மங்களாசாஸனம் செய்தருள வேண்டும் என்று பிரார்த்தித்ததின்பேரில் திருவாரூர் ஸ்ரீ ராஜகோபாலாசாரியர் க்ருஹத்திலிருந்துபுறப்பட்டு 6 மைல் உள்ள திருக்கண்ணமங்கைக்கு எழுந்தருளினார். பூர்ணகும்பத்துடன் அவ்வூர் வாசிகள் எதிர்கொண்டு வரவேற்று 22-4-55 அன்று ஆராதித்தார்கள். காலை அபிகமன ஆராதனம் முடிந்ததும் கோயிலதிகாரிகள் அரவணை ப்ரஸாதங்களுடன் ஆச்ரமத்திற்கு வந்து இங்கு திருவுள்ளப்படி எல்லாம் ஸித்தமாக இருக்கிறது. எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தருள வேண்டும் என்று ப்ரார்த்தித்ததின்பேரில் ஸகல பிருதுகளுடன் 4 வீதிப்ரதக்ஷிணமாக எழுந்தருளி வடக்குகுளக் கரையிலுள்ள பாஷ்யகாரர் ஸன்னிதி அருகாமையில் எழுந்தருளும்பொழுது வழக்கப்படி ஸ்ரீ சடாரியை எழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்து

எதிர்கொண்டு வரவேற்று ஸ்ரீ அழகியசிங்கரை ஸகல மர்யாதைகளுடன் கோயிலுக்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போனார்கள். ஸ்ரீ அழகியசிங்கரும் பெருமாள் ஸன்னிதி, தாயார் ஸன்னிதி முதலிய ஸன்னிதிகளில் மங்களாசாஸனம் செய்துகொண்டு வழக்கப்படி ஸகல மர்யாதைகளையும் பெற்றுக்கொண்டு ஆச்ரமத்திற்கு எழுந்தருளியாயிற்று. திருவாரூர் இந்தியன் பேங்கர் ஸ்ரீ ஸ்ரீனிவாஸராகவாச்சாரியர் மூன்று நாள் ஆராதித்தார். 25-4-55 அன்று அக்ஷயத்ருதீயையை முன்னிட்டு பக்தவத்ஸலன் கருடவாஹனத்தில் வீதி ஊர்வலமாக எழுந்தருளும்பொழுது கோயில் ஆபிஸர்முதலியவர்களின் ப்ரார்த்தனையின் பேரில் ஆச்ரம வாசலில் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. ஸகல மர்யாதைகளும் நடந்தன. ஸ்ரீ அழகியசிங்கர் இவ்வூர் மேலண்டை வீதியில் பாழடைந்து இருக்கிற மனையை நேரில் பார்வையிட்டு காம்பவுண்ட் சுவரை சீக்கிரத்திலேயே கட்டி மடமும் கட்ட தகுந்த மனுஷ்யர்களைக் கொண்டு ஏற்பாடு செய்தாயிற்று. அன்று ராத்ரி அங்கிருந்து புறப்பட்டு 8 மைல் உள்ள கல்யாணமாதேவிக்கு எழுந்தருளியாயிற்று. 26-4-55 அன்று ஸ்ரீ ஸ்ரீனிவாஸாச்சாரியர் ஸ்ரீ வேணுகோபாலாச்சார் முதலியவர்கள் ஆராதித்தார்கள். அன்று ராத்ரி அங்கிருந்து புறப்பட்டு கண்கொடுத்தவனிதம் எழுந்தருளியாயிற்று. 27-4-55 அன்று அவ்வூர் ஸ்ரீ ஸந்தானமய்யங்கார் முதலியவர்கள் வெள்ளி மண்டபத்திலுள்ள எல்லாப் பெருமாளுக்கும் திருமஞ்சனம் பண்ணிவைத்து ஆராதித்தார்கள். அவ்வூரிலும் திருவாரூர் இந்தியன் பேங்கர் ஸ்ரீ ஸ்ரீனிவாஸராகவாசாரியர் மூலங்குடி ஸ்ரீ கோபாலய்யங்காரைக் கொண்டு மூன்றுநாள் ஆராதித்தார் 27-4 55 அன்று பாஷ்யகாரர் திருநக்ஷத்ரம் சேவை சாற்றுமுறையுடன் ஸ்ரீ அழகியசிங்கரால் வெகுவிமர்சையாக பண்ணப்பட்டது. 30-4-55 அன்று ராத்ரி அங்கிருந்து புறப்பட்டு எரிக்காட்டூர் எழுந்தருளியாயிற்று. 1-5-55 அன்று அவ்வூர் ராமஸ்வாமி அய்யங்கார் தன்னுடைய க்ருஹத்தில் எழுந்தருளப்பண்ணி ஆராதித்தார். அவ்வூருக்கு எழுந்தருளும்பொழுது கண்கொடுத்தவனிதத்துக்கு அருகில் உள்ள விடையபுரம் ஸ்ரீமான் வாஸுதேவ நாயக்கர் என்பவர் மிகவும் பக்திச்சிரத்தையுடன் தங்கள் ஊர் வாஸுதேவப் பெருமாள் கோயிலில் பல்லக்குடன் வழிமண்டகப்படி பண்ணிவைத்து ஸம்பாவனை பண்ணினார். எரிக்காட்டூரிலும் இந்தியன் பேங்கர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவாச்சாரியர் இரண்டு நாள் ஆராதித்தார். மறுபடியும் திருவாரூர் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியர் தங்கள் ஊருக்கு எழுந்தருளி அநுக்ரஹிக்கவேண்டும் என்று ப்ரார்த்தித்ததின் பேரில் 3-5-55 ராத்ரி புறப்பட்டு திருவாரூர் எழுந்தருளினார். 4-5-55 அன்று ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியர் தன்னுடைய க்ருஹத்தில் எழுந்தருளப் பண்ணினார். 5-5-55 ந்ருஸிம்ம ஜயந்தியன்று ஆராதித்தார். அன்று ஸ்வாதி திருமஞ்சனம் பெரிய பெருமாளுக்குகாலையில்ஸாயங்காலம் 5 மணிக்கு பாகவத புராண ப்ரவசனமும் ப்ரதி வருஷம் போல் விமர்சையாக நடந்தன. 6-5-55 அன்று ஸ்ரீ அழகியசிங்கர் அபிகமன ஆராதனம் நடந்ததும் விஜயபுரத்திற்கு 1 மைல் தூரத்திலுள்ள குளத்திற்கு எழுந்தருளி திருமுடி விளக்கத்தை முடித்துக்கொண்டு சத்ரசாமராதி ஸகல பிருதுகளுடன் மடத்திற்கு எழுந்தருளியாயிற்று. அன்று ராத்ரி 8 மைல் தூரமுள்ள கம்பங்குடிக்கு எழுந்தருளியாயிற்று. 7-5-55 அன்று அவ்வூர் ஸ்ரீ பூவராகாச்சாரியர் அவர் தம்பி முதலியவர்கள் தங்களுடைய க்ருஹத்தில் எழுந்தருளப்பண்ணி ஆராதித்தார்கள். அன்று ராத்ரி 10 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு 5 மைல் தூரமுள்ள கடஹம்பாடிக்கு எழுந்தருளினார். 8-5-55 அன்று அவ்வூர் ஸ்ரீ அண்ணாஸ்வாமி அய்யங்கார் பார்யாள் கனகவல்லி அம்மாள் தன் பிறந்தகத்தில் எழுந்தருளப்பண்ணி ஆராதித்தார். அங்கிருந்து அன்று ராத்ரி 9 மணிக்கு புறப்பட்டு 7 மைல் தூரமுள்ள போளம் எழுந்தருளினார். 9-5-55 அன்று அவ்வூர் வாசிகள் ஸ்ரீ பொன்னுசாமி அய்யர் கார் க்ருஹத்தில் எழுந்தருளப்பண்ணி ஆரா

தித்தார்கள். அன்று ராத்ரி 10 மணிக்கு புறப்பட்டு 11 மைல் தூரமுள்ள தோழுந்தூருக்கு எழுந்தருளினர். 10-5-55 அன்று அவ்வூர் வாசிகள் யதாசக்தி எங்கள் திரவ்யம் பெருமாளுக்கு இருக்கவேண்டும் என்று ஸமர்ப்பித்தார்கள். ததீயாராதனை ஸன்னதி திட்டத்திலேயே நடந்தது. (தொடரும்)

திருத்தம்

'பட்டுக்கோட்டையில் ஸ்ரீ நாராயணஅய்யங்கார் ஸ்வாமியால் ஸ்ரீ அஹோபிலமடம் 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் நியமனத்தின் பேரில் காசாங்குளம் மேல்கரையில் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீ ப்ரஸன்னவேங்கடேசப் பெருமாள் ஸன்னிதியில் ஸ்ரீ அழகியசிங்கர் மங்களாசாஸனம் செய்யவேணுமென்று ப்ரார்த்தித்ததின்பேரில் இரவு 9மணிக்கு ஷெ ஸன்னிதிக்கு எழுந்தருளி ஸன்னிதிஸம்ப்ரதாயப்படி அருளப்பாடிட்டு மங்களாசாஸனம் செய்து மாலை பரியட்டம் முதலிய ஸகல மரியாதைகளையும் ஸ்வீகரித்தாயிற்று. பிறகு பெருகவாழ்ந்தான் எழுந்தருளி மறுநாள் (2-4-55) அங்கும் பட்டுக்கோட்டை ஆஸ்திகர்களின் திருவாராதனஞ்திகளாகவே நடந்தது' என்று உபாத்யாயம் நரஸிம்ஹாசார்யர் எழுதுகிறார்.

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீமத்ராமாயண பட்டாபிஷேகம்

சென்னை, பி. ஆர். ஸ்கொயரில் சென்ற ஒரு வருஷகாலமாக ராமாயணரத்னகர, வித்வான், ஸ்ரீ. உப. கோமல், சேஷாத்ரியாசார்யஸ்வாமியால் செய்யப்பட்டுவந்த ஸ்ரீமத்ராமாயண ப்ரவசனம் 8-5-55 அன்று ஸ்ரீஸீதாராமபட்டாபிஷேகத்துடன் முடிவடைந்தது. இதற்கு பூர்வாங்கமாக ஒன்பது தினங்கள் வேதபாராயணமும், ராஜ்ய மந்திரிகள், நீதிபதிகள், ப்ரமுகர்களது ஆத்யக்ஷ்யத்தில் உபந்யாஸங்களும் நடத்தப்பட்டன. கங்கை முதலிய புண்யநதிகளிலிருந்து தீர்த்தம் கொண்டுவந்து கலசஸ்தாபனபூர்வகம் பட்டாபிஷேகம் நடந்தது. பட்டாபிஷேகத்தன்று சுமார் 5000 பேர்களுக்கு அன்னதானம் செய்யப்பட்டது. அன்றிரவு ஹைகோர்ட்நீதிபதி, ஸ்ரீ. என். ராஜகோபால ஐயங்கார் தலைமை தாங்கி உபன்யாஸகருக்கு அப் பேட்டைவாஸிகளின் சார்பில் ரூ. 2001 கொண்ட பணமுடிப்பை அளித்து உபன்யாஸகரின் திறமையையும் பி. ஆர். ஸ்கொயர்வாஸிகளின் மஹத்தான ஆதரவையும் கொண்டாடினர். மற்றும் சிலர் வேஷ்டி, வெள்ளிப்பாத்திரங்கள் பணம் முதலியவற்றை ஸன்மானமாகக் கொடுத்ததுடன் ஸ்வாமியின் ப்ரவசனத்தால் இங்குள்ளவர்களுக்கு ஆஸ்திக்யம் தெய்வபக்தி ஸதாசாரம் முதலியவற்றில் நம்பிக்கையும் ச்ரத்தையும் அதிகரித்திருப்பதால் பாரதாதி புராணப்ரவசனங்கள் இங்குதொடர்ந்து நடைபெற பகவான் அநுக்ரஹிக்கவேண்டுமென்று கூறினர்கள். எல்லோருக்கும் சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பட்டு இந்த வைபவத்தில் பங்கெடுத்துக்கொண்டு சிறப்புறச்செய்த அனைவருக்கும் நன்றி கூறப்பட்டு இவ் விழா இனிது முடிந்தது. எங்குமில்லாதபடி மிக விமர்சையாக இங்கு ப்ரவசனம் நடைபெறுவதற்கு ஸ்ரீ. உப. பாராஞ்சி, க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, டாக்டர், செல்லப்பா, மற்றும் அவர்களது குடும்பத்தோரது முயற்சியே காரணமென்று எங்கும் கொண்டாடப்படுகின்றது.

ராமபக்தன்

ஸ்ரீ அஹோபிலமடம் ஆரம்பப்பாடசாலை வருஷாந்தரக்கொண்டாட்டம் ஸ்ரீரங்கம்

ஷை பாடசாலையின் வருடாந்தரக் கொண்டாட்டம் உத்தரவீதி ஸ்ரீ அஹோபிலமடத்தில் சென்னை அட்வொகேட், ஸ்ரீ K பாஷ்யம் அய்யங்கார், M. L. C. ஸ்வாமியின் தலைமையில் கொண்டாடப்பட்டது. அப்போது தலைவர் பேசியதன் ஸங்க்ரஹம்:—

ஸ்ரீ அழகிய சிங்கர் சிறு வயதிலேயே பிள்ளைகளை நல்வழியில் திருப்பினால் வயது வந்த பின்பும் அவர்கள் நல்வழியில் நடப்பார்கள் என்ற காரணத்தினால் இப்பள்ளிக்கூடங்களை ஆரம்பித்திருக்கிறார். இப்பள்ளிக்கூடங்களை இன்னும் முன்னுக்கு கொண்டுவருவதற்கு பல வழிகளைக் கையாளலாம். இங்கு பையன்களுக்கு புஸ்தகங்களைக் கொடுத்து உதவுவது பாராட்டத்தக்கது. எவ்வளவுதான் ஸ்ரீ அழகிய சிங்கரும் நிர்வாகிகளும் முயற்சித்தாலும் பெற்றோர்கள், செல்வந்தர்கள் இவர்களின் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாதது. இப்பள்ளிகளை இன்னும் பிரபலப்படுத்த பெற்றோர்கள் இப்பள்ளிக்கூடத்தை முன்னுக்குக் கொண்டுவருவதைத் தங்கள் கடமையாகக் கருதவேண்டும். மேலும் இக்கல்வியின் கொள்கைகளை நன்கு ஆராய்ந்தால் தாய்மார்களின் ஒத்துழைப்பு வேண்டியது அவசியம்.

ஸம்ஸ்க்ருதமே அழிந்து வரும் இக்காலத்தில் இதுமாதிரியான பள்ளிக்கூடத்தை அமைத்தல் அவசியம் என ஸ்ரீ பாஷ்யம் அவர்கள் வற்புறுத்தினார்கள். வெறும் ஸம்ஸ்க்ருத வித்தையை மாத்திரமன்றி காலத்திற்கு ஏற்ற இதர பாஷைகளையும் சேர்த்து சொல்லிக் கொடுக்க ஸ்ரீ அழகிய சிங்கர் ஏற்பாடு செய்தது பாராட்டத்தக்கது. இதுமாதிரியான பள்ளிக்கூடங்களால் வர்ணாச்ரமதர்மங்களும்நிலை பெறக்கூடும். இப்பள்ளிக்கூடங்களினால் ஏற்படும் செலவினை மதியாது இந்த முயற்சியால் ஸ்ரீ அழகிய சிங்கர் இறங்கியிருப்பது ஸ்ரீஅழகிய சிங்கருக்கு மதாசாரங்களை பரப்புவதில் உள்ள ஒரு ஊக்கத்தை காட்டுகிறது.

அத்துடன் கேவலம் மடத்து நிர்வாகிகளாலேயே பள்ளிக்கூடம் நடப்பது என்பது முடியாத காரியம். செல்வந்தர்களும் இத் தர்ம கைங்கர்யத்தில் பங்கெடுத்துக்கொள்வது அவசியம் என ஸ்ரீ பாஷ்யம் அவர்கள் வற்புறுத்தினார். மேலும் பொதுவாக இப்பள்ளி மூலமாகவும் உண்டாகுமாறு செய்யவேண்டும் உதாரணமாக மாம்பலம் பள்ளிக்கு ஒரு தனி கட்டிடம் கட்டுவதற்காக நிதி வசூலிக்கின்றனர். இப்பள்ளிக்கூடத்தில் கட்டிடங்கள், மேஜைகள், பெஞ்சுகள் போன்ற சாதனங்கள் நிறைந்திருந்தால் சிறுவர்களை இப்பள்ளிகளும் ஆகர்ஷிக்கும் என்பது திண்ணம். இதற்கு ஆரம்பத்தில் சிறிது எதிர்ப்பு தோன்றினாலும் நாளடைவில் அது மறைந்துவிடும்.

பூர்வாசாரங்களை நிலை நிறுத்துவதில் இப்பள்ளிகள் மாத்திரமன்றி வேறு சில வழிகளையும் கையாளலாம் என்றொரு யோசனையை ஸ்ரீ பாஷ்யம் அவர்கள் கூறினார். மற்ற பள்ளிகளிலும் படிப்பவர்களுக்கும் ஸ்தோத்திர பாடங்களை போதிக்க பெற்றோர்கள் ஏற்பாடு செய்யலாம். மாலை 5 மணிக்கு மேல் ஸ்தோத்திர பாடம் முதலியவைகளை சொல்லிக்கொடுக்கலாம். மேலும் நமது கிரந்தங்களை போதிக்க மாலை 5 மணிக்கு மேல் வகுப்புக்கள் ஏற்படுத்தலாம் என ஸ்ரீ பாஷ்யம் அவர்கள் கூறினர்கள்.

சிறுவர்களுக்கு மட்டுமே ஸ்தோத்திரப் பாடம் முதலியன சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்தல் வேண்டும் என்று இல்லை. எழும்பூரில் நடக்கும் வேதசபையைப் போல் ஒரு தொழிலில் இருக்கும் முதியோர்களுக்கும் கூட அவர்களில் ஓய்வு நேரத்தில் வேதம் முதலானவைகளை சொல்லிக்கொடுக்குமாறு செய்யலாம். இவ்வாறு செய்வதினாலும் ஸ்ரீ அழகிய சிங்கரின் எண்ணம் நிறைவேறக்கூடும் என்றார். இதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துகொள்ள வேணுமாய்க் கேட்டுக்கொண்டார்.

பிறகு ஸ்ரீ E. V. ஸ்ரீனிவாஸாசாரியார் நம் பாடசாலையும் பொது ஜன ஒத்துழைப்பும்' என்பதைப்பற்றி முக்கியமாகக் கூறி ஒழுக்கம் சன்மார்க்கம் போன்றவைகள் மற்ற நாடுகளுக்கும் இந்தியாவிற்கும் வழிகாட்டியாக இருக்கின்றன என்றும் இதே மாதிரி ஸம்ஸ்க்கிருதமும் சுமார் 1000 வருஷத்திற்கு முந்தியுள்ள தேவ பாஷையென்றும், ஜெர்மனி முதலான நாடுகளில் ஸம்ஸ்க்கிருத தோத்திரங்களை நடத்தி அதன் பலனை அனுபவிக்கின்றனர்

என்றும் இந்த பாஷை மேல் நாடுகளில் பெறுமை பெற்றுள்ளது எனவும் இந்த பாஷையை முதன்மையாகக் கொண்ட இம்மாதிரி பள்ளிக்கூடங்களில் ஆர்வத்துடன் குழந்தைகளைச் சேர்க்கவேண்டும் என்றும் பெற்றோர்களைக் கேட்டுக்கொண்டார்.

பிறகு ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாச்சாரியார் தன்னுடைய அசௌகரியத்தையும் கருதாது ஆரம்பத்திலேயே வந்திருந்து மதப்பிரசாரமும் அதனுடைய அவசியத்தையும் எடுத்துரைத்து ஸ்ரீமத் அழகிய சிங்கர் இம்மாதிரியான காரியங்களில் ஈடுபட்டிருப்பதை மெச்சி இதில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்

பிறகு முடிவுரையில் பிரின்ஸிபால் T, ராமஸ்வாமி ஐயங்கார் இம்மாதிரியான பாடசாலையின் அவசியத்தைக் கூறி தான் ஒவ்வொரு பாடசாலைக்கும் நேரிட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் போக முடியாததால் ஸ்ரீரங்கத்திற்கு ஸ்ரீ உபவே E. V. ராஜகோபாலாசாரியரையும், ஸ்ரீ A. நரசிம்மாசாரியாரையும் உதவியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டும் பச்சாம்பேட்டை ஸ்ரீ உபவே ஸ்ரீனிவாசாச்சார் அவர்கள் இந்த பாடசாலையின் முன்னேற்றத்திற்காக சிரமப்படுவதையும் பாராட்டிப் பேசினார். இதன் பிறகு விழாவிற்கு பெரிய வித்வான்களும், பிரமுகர்களும் வந்திருந்து நடத்தி வைத்ததிற்கு தன்னுடைய கிரதஞதையைத் தெரிவித்துக் கொண்டார் இந்த பாடசாலையின் கர்த்தாவாகிய மகா ஸ்ரீ G. கிருஷ்ண மூர்த்தி M.L.C அவர்களை பாராட்டிப் பேசினார். கடைசியாக 4 வகுப்புகளிலும் முதல் இரண்டு பையன்களுக்கு பாரிதோஷிகம் வழங்கி எல்லாப் பையன்களுக்கும் வேஷ்டியும், ஸமஸ்கிருத புஸ்தகமும், வழங்கி விழா இனிது முடிந்தது.

A. நரஸிம்ஹ ஐயங்கார், ஏஜண்ட்.

ஸ்ரீவாத்ஸ்ய வரததேசிகஸபை

நடாதூர் அம்மாள் திருநக்ஷத்ரத்தை முன்னிட்டு ஸ்ரீ. உப. தேவனூர்விளாகம், வீரராகவாசாரியர் ஸ்வாமி திருமாளிகையில் ஐந்து தினங்கள் முன்பே வேதப்ரபந்தபாராயணத்துடன் உபக்ரமிக்கப்பட்டு நடந்தன. மாலை 3 மணிக்குமேல் திருக்குடந்தை ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸபை கூடிற்று. பல ப்ரமுகர்களும் வித்வான்களும் வந்திருந்தார்கள். அப்பொழுது முன்பு தெரிவித்தபடி ஸ்ரீ. உப. வித்வான், மதுராந்தகம், தி. ஈ. வீரராகவாசார்யர் ஸ்வாமிக்கு முதல் பாரிதோஷிகமும் ஸ்ரீ. உப. பெருக்காரணை சக்ரவர்த்தியாசார்யர் ஸ்வாமிக்கு இரண்டாவது பாரிதோஷிகமும் அளிக்கப்பட்டது. மூன்றாவது பரிசுக்கு ஒருவரும் எழுதவில்லை. ஆகையால் இன்னும் தொகையைச்சேர்த்து மற்றுமுள்ள பண்டிதர்களுக்கு ஸன்மானமளிக்கப்பட்டது. வ்யாஸங்களை பரிசிலனை செய்ததற்கு ஸ்ரீ. உப. வித்வான், ஸ்ரீநிவாஸபாட்ராசாரியருக்கு ஸம்பாவனை செய்யப்பட்டது. அங்கு வந்திருந்த வித்வான்கள் அம்மாளின் பெருமையையும் க்ரந்தங்களையும்பற்றியும் உபந்யாஸம் செய்தார்கள்.

வில்லூர், ஸ்ரீநிவாஸராகவதாஸ:

ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹா தேசிகன் கைங்கர்யஸபா திருவள்ளூர்.

இந்த ஸபையின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமைகளில் வித்வான்களைக்கொண்டு ஸ்ரீ அஹோபிலமடத்தில் உபந்யாஸங்கள் செய்யப்பட்டு வருகிறது. ஸ்ரீ. உப. புரிசை, நடாதூர், க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி 'ஸ்ரீ ராமாவதாரம்' பற்றியும், ஸ்ரீ. உப. அத்தி, மாடபூஷி, நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி, 'விச்வாமித்ர யாக ஸம்ரக்ஷணம்' பற்றியும், ஸ்ரீ. உப. பாதூர், தூப்புல், ராமபத்ராசார்ய ஸ்வாமி, 'ஸீதா கல்யாணம்' பற்றியும், ஸ்ரீ. உப. புரிசை, வங்கிபுரம், வெங்கடாசார்ஸ்வாமி, 'பாதுகா பட்டாபிஷேகம்' பற்றியும் வெகு அழகாக உபந்யஸித்தார்கள். ஸ்ரீ எவ்வுள்கிடந்த எம்பெருமானின் சைத்ரோத்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீ. உப. மன்னார்குடி, வரதாசார்ய ஸ்வாமி, 'ருக்மிணீ கல்யாணம்' என்பது பற்றியும், ஸ்ரீ. உப. வித்வான், ஸாரஸாரஜ்ஞ, திருக்கள்ளம், சக்ரவர்த்தி, நரஸிம்ஹராகவாசார்யஸ்வாமி, 'குஹபரதஸமாகமம்' 'ஆசார்யவைபவம்' என்பது பற்றி 2 தினங்களும், ஸ்ரீ ந்ருஸிம்ஹஜயந்தியன்று 'ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரம்' பற்றியும், மறு நாள் 'ஸ்ரீ விசிஷ்டாத்வைதம்' என்பது பற்றியும் மிகவும் நன்றாக அநேக ப்ரமாணங்களைக் கொண்டு உபபாதனம் செய்து உபந்யாஸம் செய்தார்கள். ஸபையின் சார்பில் வித்வான்களுக்கு யதோசிதம் ஸம்பாவனை செய்யப்பட்டு வந்தனோபசாரம் கூறப்பட்டது.

கார்யதர்சிகள்.

ஸ்ரீ:

ஹிந்து தர்மமும் மதமும்

ஹிந்துக்கள் என்பவர்கள் புருஷஸூக்தத்தில் சொல்லப்பட்ட அகிருத்தனென்கிற பகவானுடைய திவ்யதேஹத்தின் ஒவ்வொரு அவயவங்களிலிருந்து ஒவ்வொரு ஜாதிகள் வெளிக்கிளம்பியதாகச்சொல்லப்பட்ட பெருமை வாய்ந்தவர்கள். ஹூணயவநாதிஜாதிகள் இப்படிப் பட்டவர்களல்ல. இந்த நாலு ஜாதிகளுடைய ஸங்கரத்தால் ஏற்பட்ட அநுலோமப்ரதிலோமாதிஜாதிகளும் ஹிந்துக்களென்றே சொல்லப் படுகிறார்கள். ஹூணயவநாதிஜாதிகள் வஸிஷ்டவிச்வாமித்ரர்களுடைய யுத்தத்தில் விச்வாமித்ரரையும் அவருடைய ஸைந்யத்தையும் நாசம் செய்வதற்காக வஸிஷ்டருடைய ஆஜ்ஞையால் காமதேனுவினுடைய சரீரத்திலிருந்து உண்டானவர்கள். இவர்கள் ஹிந்துக்களல்ல.

ஸ்ருஷ்டிக்கு முன் இந்த ஜகத்தானது
'ஆஸீதிதம் தமோபூதம் அப்ரஜ்ஞாதமலக்ஷணம் |
அப்ரதர்க்யமவிஜ்ஞேயம் ப்ரஸுப்தமிவ ஸர்வதஃ ||'

தமஸ்ஸாக இருந்தது. தமஸ்ஸில் லயித்திருந்தது. தமஸ்ஸென்றால் ப்ரக்ருதி. அதாவது— மஹாப்ரளயத்தில் ஜகத் முழுவதும் ஸூக்ஷ்மரூபமாக ப்ரக்ருதியில் லயத்தை அடைந்திருந்தது. ப்ரளயகாலத்தில் ஜகத்தானது ஒரே ஸமுத்ரமாக இருக்கும்போது 'ஏகார்ணவே வடபத்ரே' என்றும், 'ஆலமாமரத்தினிலைமேல் ஒரு பாலகனாய்' என்றும் சொல்லுகிறபடி ஆலிலையில் பற்றிக்கொண்டிருந்த பகவான் 'ததஃ ஸ்வயம்பூர்பகவாந் ப்ராதுராஸீத்தமோநுதஃ' என்று சொன்னபடி ஸ்வேச்சையால் ஓர் அப்ராக்ருதமான திவ்யமங்களவிக்ரஹத்தை ஸ்வீகரித்தார். இந்த ச்லோகம் மநுஸ்ம்ருதியில் சொல்லப்பட்டது. மநுஸ்ம்ருதியின் வ்யாக்யானகர்த்தாவான குல்லூகபட்டர் பகவானுடைய திவ்யமங்கள விக்ரஹமானது இதர ஜீவன்களுக்குப்போல் கர்மத்தினால் ஏற்பட்டதல்ல. ஸ்வேச்சையாலே ஸ்வீகரிக்கப்பட்ட திவ்யதேஹமென்று ஸ்பஷ்டமாக எழுதியிருப்பது ஸத்ஸம்ப்ரதாயத்தையொட்டியிறே. 'ஸோऽபித்யாய' என்கிறபடி விவிதமான ப்ராணிஸமூஹங்களை ஸ்ருஷ்டிக்கத் திருவுள்ளம்பற்றி முதலில் ஜலத்தை ஸ்ருஷ்த்து அதில் வீர்யத்தை ஆரோபம்செய்தார். அந்த பீஜரூபமான பகவதிச்சையானது ஓர் சுத்தமான அண்டமாயிற்று. அதை பகவான் இரண்டு துண்டாக்கினார். அதில் ஒன்று ஸ்வர்க்கமாயிற்று. மற்றொன்று பூமியாயிற்று. பிறகு 24 தத்வங்களையும் ஜீவராசிகளையும் 'பஹு ஸ்யாம் ப்ரஜாயேய' என்று பஹுபவனஸங்கல்பம் செய்து, அதாவது— தான் ஸூக்ஷ்மசேதநாசேதநவிசிஷ்டனாக இருந்து ஸ்தூலசேதநாசேதநவிசிஷ்டனாக ஆகவேண்டுமென்று ஸங்கல்பித்தென்றபடி. ஜீவராசிகளுடைய பூர்வஜந்மகர்மாநுகுணமாக மநுஷ்ய பசு பக்ஷி முதலான சரீரங்களோடு 'அவிசேஷாந் ப்ரலயே ஜந்தூநவேக்ஷ்ய ஜாதநிர்வேதா | கரணகளேபரயோகம் விதரஸி' என்று தயாசதகத்தில் ஸ்ரீஸ்வாமி தேசிகன் அருளியபடி, தயையாலே ஜீவராசிகளை சேர்ப்பித்தார். பிறகு இது தர்மம் இது அதர்மமென்று தெரிவிப்பதற்காக தர்மாதர்ம விவேகத்தைச் செய்துவைத்தார். ஜீவராசிகளுக்கு வேண்டிய பெயர் முதலானவற்றை வேதங்களிலிருந்தே கல்பித்தார். வேதத்தில் எது செய்யவேண்டுமென்று சொல்லப்படுகிறதோ அது தர்மம். யாகாதிகர்மா தர்மம். எது நிஷேதிக்கப்பட்டிருக்கிறதோ அது அதர்மம். ச்யேநயாகம் ராத்ரிச்ராத்தம் முதலானதுகள் அதர்மம். அலௌகிகமான அதாவது ஆமுஷ்மிகமான ச்ரேயஸ்ஸுக்கு எது ஸாதநமோ அது தர்மமென்றும் சிலர் சொல்லுகிறார்கள். இந்த தர்மமானது 'ச்ருதிஃ
க்ஷோ ஒபௌருஷேயம் ஸௌவசீந்த்ரியமிரூஹஃ |
யீ விஷ்யா ஸத்ருசெக்ராயொ ஒஸாகாஸேஹவக்ஷ

ணம்' என்று பத்துவிதமென்று மநு சொல்லுகிருர். தர்மத்தை அறியவேண்டுமென்கிற எண்ணமுள்ளவர்களுக்கு வேதர் ப்ரமாணமாகும். இப்படியிருக்கிற இந்த தர்மத்தை எந்த விப்ரர்கள் படித்துத் தெரிந்துகொண்டு ஆத்மஜ்ஞானஸஹாயத்தால் இப்படி தர்மத்தை யநுஷ்டிக்கிருர்களோ அவர்கள் மோக்ஷத்தை யடைவர்களென்று மநு சொல்லுகிருர். இவ்வாறு ச்ருதி ஸ்ம்ருதிகளிலே சொல்லப்பட்ட தர்மத்தை எவன் அநுஷ்டிக்கிருனே அவன் இந்த உலகில் கீர்த்தியை அடைந்து கடைசியாக தேஹாவஸாநத்தில் மோக்ஷத்தை யடைவானென்றும் மநு சொல்லுகிருர். ஆகையால் நாம் எப்பொழுதும் தர்மத்தை விடக்கூடாது. நம் தேஹாவஸாநத்தில் நம்முடன் கூடவருவது தான் செய்த தர்மம் ஒன்றுதான். நாம் முடிந்தபிறகு நம்முடைய தேஹத்தை பத்நீ முதலான பந்துக்கள் திரும்பிப்பாராமலே சீக்ரத்தில் தஹனம் செய்துவிட்டுச் செல்லுவார்கள். இந்த அர்த்தத்தை 'ம்ருதம் ஶரீரமுத்ஸ்ருஜ்ய காஷ்டலோஷ்டஸமம் க்ஷிதௌ | விமுகா பாந்தவா யாந்தி தர்மஸ்தமநுகச்சதி' என்று மநு சொல்லுகிருர். தர்மிஷ்டன் ஒருவன் இறந்த பிறகும், அவன் மிக்க தார்மிகன், த்யாகீ, ஸாத்விகன் என்று நல்ல கீர்த்தி எப்பொழுதும் இருந்துவருகிறது. ஆனுல் அதர்மத்தை அநுஷ்டிக்கிறவர்கள் நல்ல ஸம்பத்துடனும் ஸந்தானத்துடனும் நல்ல கீர்த்தியுடனும் இருந்து வருவதை சிலவிடங்களில் காண்கிருேமே என்று கேள்வை கேட்கலாம். இதற்கு உத்தரமும் மநு சொல்லியிருக்கிருர். எங்ஙனேயென்னில்; 'அதர்மேணைததே தாவத்ததோ பத்ராணி பஶ்யதி | ததஸ்ஸபத்நாஞ்ஜயதி ஸமூலஸ்து விநஶ்யதி' ஒருவன் அதர்மத்தால் அதாவது பரத்ரோஹம்செய்து பணம் ஸம்பாதித்து கிராமங்களையும் ஸம்பாதித்து ரதவாஹநாதிபோகங்களுடன் ப்ரஸித்தனுக இருந்து சத்ருக்களை ஜயிக்கிருன். பிறகு அதர்மபரிபாகத்தால் தன ஸுகாதிபோகங்களுடன் தானும் நசிக்கிருன். அல்லது தான் செய்த அதர்மமானது தன்னை நசிப்பிக்காவிட்டாலும் தன்னுடைய புத்ரபௌத்ராதிகளை ஸமூலமாக நாசம் செய்துவிடுகிறதென்றும் சொல்லுகிருர். ப்ராணரக்ஷணர்த்தம் கூட தர்மத்தை விடக்கூடாது என்று ப்ரமாணம் கூறுகிறது. ஒருவேளை நம்முடைய தர்மம் குணமில்லாததாக இருந்தபோதிலும் பிறருடைய தர்மம் நல்ல குணமுள்ளதாக இருந்தபோதிலும் நம்முடைய தர்மத்திலே நாமிருப்பது நல்லது. தவிர பிறருடைய தர்மத்தை அநுஷ்டிக்கலாகாது என்று கீதாசார்யன் 'ச்ரேயாந் ஸ்வதர்மோ விகுண:' என்கிற ச்லோகத்தால் அறுதியிட்டான். மநு மற்ெருரு ச்லேகத்தால் 'தர்ம ஏவ ஹதோ ஹந்தி தர்மோ ரக்ஷதி ரக்ஷித: | தஸ்மாத்தர்மோ ந ஹந்தவ்ய: மா நோ தர்மோ ஹதோ வதீத்'. நாம் தர்மத்தை அதிக்ரமித்து நடந்தால் அது நம்மை நாசம் செய்துவிடும். நாம் அதை ரக்ஷித்தால் அதுவும் நம்மை ரக்ஷிக்கும். எவனொருவன் தர்மத்தைத் தடுக்கிருனே அவன் ப்ராஹ்மணனுனாலும் தேவர்கள் அவனை சூத்ரஸமனென்று நினைக்கிருர்கள். ஆனுல் யுகாந்தரங்களில் போல் நம்மால் தர்மங்களை இந்த யுகத்தில் அநுஷ்டிக்க முடியாது. ஆனுல் நாம் இவ்வளவும் செய்ய வேண்டுமென்று அபிநிவேசத்துடன் இருந்தால்தான் சில தர்மங்களாவது நம்மால் செய்ய முடியும். ஸந்த்யாவந்தனம் செய்தல், சிகையை ரக்ஷித்தல், நம்நெற்றியில் திருமண் விபூதி முதலானவைகளை தரித்தல், மாதாபிதாக்களுடைய ச்ராத்தத்தை ச்ரத்தையுடன் செய்தல், வைஷ்ணவனுக இருப்பவன் (ஸமாச்ரயணம்) தப்தசக்ராங்கனம் ஸதாசார்யன் மூலமாய் செய்துகொண்டு அஷ்டாக்ஷராதி மந்த்ரங்களைப் பெற்று பத்து ஆவ்ருத்தியாவது அஷ்டாக்ஷரத்தை ஜபித்தல், நமக்கு ஒழிந்த ஸமயங்களில் ச்ருதி, பாஞ்சராத்ராதிசாஸ்த்ரங்களில் உத்கோஷிக்கப்பட்ட மூர்த்திபூஜையை ஆதரித்து 'க்ருஹாத்விஷ்ண்வாலயம்' என்று சொல்லியபடி கோவிலுக்குச் சென்று 'க்ஷீராந்நஸஹிதம் பஶ்யத: பாபநாஶநம் | பாதகாந்யாஶு நஶ்யந்தி கிம் புநஸ்தூபபாதகம்' என்றபடி பகவானை ஸேவித்தால் மஹாபாதகத்திலிருந்தும் விடுபடுவான்.

ஓர் விஜ்ஞாபனம்

ஸ்ரீமதழகியசிங்கரால் நம் ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தாபிவிருத்திக்காக ஆரம்பிக்கப்பட்டு 14 வருஷமாக நடந்துவரும் "ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா" ப்ரதி இங்கிலீஷ் மாதம் 15உ வெளிவருகிறது. இப்பத்திரிகையில் பல பண்டிதர்கள் அநந்யப்ரயோஜனமாகவே விஷய தானம் செய்துவருகின்றனர். அவ்வப்போது அவகாசானுஸாரமாக அவை ப்ரசுரிக்கப்படுகின்றன. சில வ்யாஸங்களை தவிர்க்கமுடியாத காரணங்களால் உடனுக்குடன் வெளியிட முடிவதில்லை. அதனால் ஸ்வாமிகள் எழுதியனுப்புவதை நிறுத்திவிடாமல் புதிய வ்யாஸங்களை எழுதியனுப்பி ஆதரிக்கும்படி ப்ரார்த்திக்கிறோம்.

எழுதியனுப்பும் வ்யாஸங்கள் அதிக விஸ்தாரமில்லாமலும், பண்டித பாமரர்களனைவருக்கும் எளிதில் புரியுமாறு (ஸம்ஸ்க்ருத வாக்யங்களுக்கு அர்த்தத்துடன்) நமது ஸஞ்சிகையில் 3 அல்லது 4 பக்கங்களுக்கு மேல் போகாமலும் புரியும்படி காகிதத்தில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதியனுப்பவேண்டும். ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் 30உக்குள் வந்துசேருமாறு முன்னதாக அனுப்பினால்தான் அடுத்து வரும் ஸஞ்சிகையில் வெளியிட ஸௌசரியமாயிருக்கும். ஸ்வாமிகள் இவ் விஷயத்தில் உதவுமாறு கோருகிறோம்.

சந்தாதாரர்களுக்கு அடுத்த ஸஞ்சிகையிலிருந்து சந்தா நெம்பர் மாற்றப்படுகின்றது. ஆதலால் தங்களது புது நெம்பர்களைக் கவனித்து நமது ஆபீஸிற்கு எழுதும் கடிதங்களில் குறிப்பிட்டனுப்பவேணும். சிலருக்கு ஸஞ்சிகைகள் கிடைப்பதில் தாமதமோ தவறுதல்களோ நேரிடில் அவர்கள் நமது ஆபீஸிற்கு எழுதினால் கூடியவரை அப்படி நேரிடாதபடி கவனிக்க உதவியாயிருக்கும்.

சந்தாதாரர்கள் தங்களது சந்தா பாக்கிகளை தாமதமின்றிக்கே அனுப்புவதுடன் மற்றுமுள்ள தமது நண்பர்களையும் பந்துக்களையும் சந்தாதாரர்களாக்கி நமது பத்திரிகை முன்னேற்றமடைவதற்கான கார்யங்களில் ஊக்கமளிப்பதுடன் தங்களது யோசனைகளையும் அபிப்பிராயங்களையும் தெரிவித்து உதவினால் நமது ஸம்ப்ரதாயாபிவ்ருத்திக்கு உதவியதாகும்.

ஸஞ்சாரக்ரமத்தின் தொடர்ச்சி.

10–5–55 ராத்ரி கடுக்காமரம் ஸ்ரீ ராமஸ்வாமி ஐயங்கார் பிரார்த்தனையின் பேரில் தேரழுந்தூரை விட்டுப் புறப்பட்டு 11 மைலுள்ள திருவழுந்தூர் (மாயவரம்) ஸ்ரீ தேசிகன் ஸன்னிதிக்கு எழுந்தருளினார். 11–5–55 ல் மாயவரத்தார் யதாசக்தி ஆராதித்தார்கள். அன்றிரவு அங்கிருந்து 18 மைலுள்ள கடுக்காமரத்திற்கு எழுந்தருளினார். 12–5–55 அன்று அவ்வூர் ஸ்ரீ சௌரிராஜ ஐயங்காரும் அவரது ப்ராதாக்களும் தங்களது க்ருஹத்தில் எழுந்தருளப்பண்ணி வெள்ளிமண்டபத்திலுள்ள எல்லாப் பெருமாளுக்கும் திருமஞ்சனம் பண்ணிவைத்து விசேஷமாக ஆராதித்தார்கள். அன்றிரவு அங்கிருந்து 6 மைலுள்ள சீர்காழிக்கு எழுந்தருளியாயிற்று. 13–5–55 அன்று அங்கும் எல்லாப் பெருமாளுக்கும் திருமஞ்சனம் பண்ணிவைத்து ஸ்ரீ வரதராஜ ஐயங்கார், ஸ்ரீ ராமஸ்வாமி ஐயங்கார் முதலியவர்கள் விசேஷமாக ஆராதித்தார்கள். ராத்ரி கண்ணனுக்கு டோலோத்ஸவமும் பண்ணிவைத்தார்கள். அன்றிரவு அங்கிருந்து புறப்பட்டு 12 மைலுள்ள திருவிழந்தூருக்கு மறுபடியுமெழுந்தருளினார். அங்கு 14–5–55 ல் கடுக்காமரத்தார் யதாசக்தி ஆராதித்தார்கள். இங்கிருந்து புறப்பட்டு ஆடுதுறைக்கெழுந்தருளி புத்தூர் வழியாக அணைக்கரைக்கு எழுந்தருளி வடதேச யாத்திரை துவங்கப்போகிறார்.

(தொடரும்)

Regd. No. M. 4437.

முக்கிய அறிவிப்பு

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ்,
திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா.

சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவை மேற்கண்ட விலாஸத்திற்கே அனுப்பவேண்டும். சந்தாதாரர்களின் விலாஸமாறுதல்கள் முதலிய தகவல்களையும் ஷை விலாஸத்திற்கே தெரிவிக்கவேண்டும். நிர்வாஹ ஸம்பந்தமான எல்லாக் கடிதப்போக்குவரத்துகளும் மேலே கண்ட விலாஸத்துடன் நடைபெறவேண்டும். பணம் அனுப்பும் போது உங்கள் **சந்தா நெம்பரையும்,** மணியார்டர் கூபனின் பின்பக்கத்தில் **விலாஸத்தையும் மறவாமல் நன்குகத்தெரியும்படி எழுதவேண்டும்.**

பத்ரிகையில் ப்ரசுரிக்கவேண்டிய வ்யாஸங்கள் செய்திகள் முதலியவைகள் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விலாஸத்திற்கு அனுப்பவேண்டும்.

ஸம்பாதகர், "ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா"
ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம், செங்கல்பட்டு ஜில்லா.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவில் விளம்பரம் செய்வோருக்கு அடியிற்கண்டபடி கட்டண விகிதங்களில் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது.

அட்டை 4-வது பக்கம் முழுவதும் ஒரு தடவைக்கு		ரூ 25—0—0
ஒரு வருஷத்திற்கு		ரூ 250—0—0
அரை ௸த்திற்கு		ரூ 125—0—0
உள்பக்கங்களில்:	ஒரு பக்கம் ஒரு தடவைக்கு	ரூ 20—0—0
ஒரு வருஷத்திற்கு		ரூ 200—0—0
அரை வருஷத்திற்கு		ரூ 100—0—0

அரை, கால் பக்கங்களுக்கும், மற்றும் சலுகை விளம்பரங்களுக்கும், மற்ற நியமங்களுக்கும் மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா, திருவள்ளூர் என்ற விலாஸத்திற்கு எழுதவும்.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam,
Sri Ahobilamutt, at. Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T.
Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.